567

முருகன் துணை.

# திருச்செங்கோட்டுக் குமாரர் பிள்ளைத் தமிழ்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 JUL 1925
MADRAS



தி. அ. முத்துசாமிக் கோ[illegible]

O-,15MMG,T
N25
178856

உ

குமரன்றுணை.

திருச்செங்கோட்டுக்

# குமாரர் பிள்ளைத் தமிழ்.

இது

திருச்செங்கோடு

தி. அ. முத்துசாமிக்கோனாரால்,

சித்தளந்தூர் மிட்டாஜமீன்தார்,

ஸ்ரீமான்

சு. முத்துசாமிக் கவுண்டரவர்கள்

விருப்பத்தின்படி,

தமது

விவேக திவாகரன் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

குரோதன-ஸ்ரீ சித்திரை-மீ

1925

894.8111
2856

உ

# முகவுரை.

பிள்ளைத் தமிழ் என்பது தமிழுக்குரித்தான தொண்ணூற்றாறு பிரபந்தங்களிலொன்று. ஆண்பாற் பிள்ளைத்தமிழ் பெண்பாற்பிள்ளைத் தமிழென இருவகை. திருச்செங்கோட்டுக் குமரக்கடவுளைக் கூறுதலின் இது ஆண்பாற் பிள்ளைத்தமிழாம். ஆண்பாற்பிள்ளைக் கவியின் இலக்கணம் இரண்டா மாதத்திற்காப்புக் கூறுதலும், ஐந்தா மாதத்திற்செங்கீரை கூறுதலும், எட்டாமாதத்தில் தாலாட்டுதலும், ஒன்பதாமாதத்திற் சப்பாணிகொட்டுதலும், பதினொராமாதத்தில் முத்தங்கூறுதலும், பனிரண்டா மாதத்தில் வாரானை கூறுதலும், பதினெட்டாமாதத்திற் சந்திரனையழைத்தலும், இரண்டாம் ஆண்டிற் சிறுபறைகொட்டலும், மூன்றாம் ஆண்டில் சிற்றில் சிதைத்தலும், நான்காம் ஆண்டில் சிறுதேருருட்டலுமெனப் பத்துப்பருவங்களாக அவ்வப்பருவத் தொழிலுக்குத் தகுவனவாகக்கூறுவதாம்.

காப்புப்பருவம் :—பாட்டுடைத்தலைவரைத் திருமால் முதலியோரால் காப்புப் புரிவித்தல்.

செங்கீரை :—செவ்விய மதுரச்சொற்களைப் பேசும் பருவம். கீர்—சொல். இப்பருவத்தின் செயல், ஒருகாலை மடக்கி ஒருகாலைநீட்டி இருகைகளையும் நிலத்திலூன்றித் தலைநிமிர்ந்து முகமசைய ஆடுதல்.

தாலாட்டு :—ஓர் வகையாக நாவசைத்துப்பாடும் பாட்டு.

சப்பாணி:—இருகரங்களையும் ஒருங்குசேர்த்துக் கொட்டுவது.

முத்தம் :—முத்தங்கொள்ளுதல்.

வாரானை :—வருதலை விரும்புதல்.

அம்புலி :—சந்திரனைவிளையாட அழைத்தல்.

சிறுபறை :—சிறிய தோற்கருவிகட்டி விளையாடல்.

சிற்றில் :—மகளிர் கட்டிவிளையாடுஞ் சிறுவீட்டை அழித்தலானசிறுகுறும்பு.

சிறுதேர் :—கைத்தேர் உருட்டிவிளையாடல் ஆம்.

இந்நூல் நாமகள் துதியில் "விரைவரு சிவஞானவாரிதிபணிப் பவென்பாலடைந்து" எனக்கூறியிருப்பினும் இயற்றினர் இன்னரென நன்குவிளங்கவில்லை. மிகுவிரைவாக அச்சிடவேண்டிநேர்ந்தமையால் அச்சுப்பிழைக ளிருக்கக்கூடும். அறிஞர்கள் திருத்தி வாசிப்பார்களென வேண்டுகிறேன்.

இத்தலத்துக்கு முருகர் பிள்ளைத் தமிழ் என மற்றொரு வேறு பிள்ளைத் தமிழ்ப் பிரபந்தமுமிருக்கிறது. பழய எடுநைந்து தொட்டால் உதிர்ந்துவிடும் நிலையுற்றுளது. யாவரே ஆயினும் இதனை அச்சிடுவித்த சித்தளந்தூர் மிட்டா ஜமீன்தார், ஸ்ரீமான் சு. முத்துசாமி கவுண்டரவர்களைப்போலத் தமிழபிமானமுற்று அச்சிடுவிப்பார்களாயின் மிகுந்த புண்ணியம்பெறுவார்கள். நல்லோர்க்குப்புகழும் புண்ணியமும் கிடைக்குமென்பதிற் சந்தேகமில்லை. குமாரக்கடவுளின் துதியாகிய இந்நூலை எழுதி அச்சிடும் இத்திருத்தொண்டை அடியேனுக் கீட்டிய நாகாசல வேலனது சீபாத கமலங்களைச்சிந்தித்து வந்திக்கின்றேன். சுபம்.

பிரதி உதவினோர்.

குமரமங்கலம் மகா--ா-ா-ஸ்ரீ ப. ஆறுமுகம் பிள்ளையவர்களால் திருச்செங்கோடு, வேட்டுவர்மடம் முத்தயத்தம்பிரான் குமாரன் ஏகாம்பரம் கையெழுத்துப்பிரதி என்றுள்ள பிரதி 1.

பெருமாக்கவுண்டன்பட்டி, வைத்தியம் மகா ா-ா-ஸ்ரீ செங்கோடப்புலவர் அவர்கள் பிரதி 1.

குரோதன௵ சித்திரைமீ } தி. அ. முத்துசாமிக்கோனார்.
4—4—25. }

முருகன்றுணை.

திருச்செங்கோட்டுக்

# குமாரர் பிள்ளைத் தமிழ்.

## பாயிரம்.

### ஆசிரிய விருத்தம்.

### விநாயகர் துதி.

நீர்கொண்ட செஞ்சடைக் காட்டினிற் கட்டுபிறை நிலவுதருந் திவலைவெண், ணித்திலஞ் சொரிவதென வமுதொழுகு சிகர நெடும்பாக் த னுகரவிதழித், தார்கொண்ட தோண்மிசைபி னேறிமின் றதுகண்டு தருகணூற் றிடர்தரவேரீஇத், தாங்கவானதிபுக் கொளிப்பவவிர் மூரல் புரி தந்தாவளந் துதிப்பாஞ், சூர்கொண்ட செங்கைவே லெனாக வல்லி யின் றொல்லிலை விடுப்பவெதிருஞ், சோரனுடல் போழ்ந்துயிர் கவர்ந்து மெய் பனிப்புறுந் தோகைதன் றுயரகற்றிக்; கார்கொண்ட குன்மழை க்டுப்பக் கடைக்கணூற் கருணைவெள் ள கொழிக்குங், காங்கேய னைப் பணி கிரிக்கிறையை வாழ்த்துமென் கவிதொறுந்தழையவே.

வார்புனற் கங்கைபணி திங்களணி யெம்பிரான் மருடகோ டீரத் தின்மேல், வைத்தபொற் றாமரைச் சிற்றடித்துணையினை வழுத்துதமி ழுள்ளுமன்பன், வெரெழு பதச்சேறு மயிடக்க ரும்போத்தி னிருதளம் பெறிகுழம்பு, மெழில் கெழுமுபைந்துகி னைந்துபின் பின்சென்ற தேய்க்குமறைமுதுவனீன்ற, பார்மிசைத் தென்மொழித் தமிழ்முறை விரித்தமுனி பரணர்முதலாம் புலமையோர், பரவுநற் கீரனு ருணகிரி நாதர்மொழி பாட்டமுதமூட்டு செவியிற், சிர்பரவு செஞ்சொலின் மிச் சிறிய புன்சொலாற் சிற்றறிவி னன்சொற்றமிழ்த், தீங்கடு வருத்தியது பூங்கடம் போங்கிவளர் திண்புயக் குமரேசனே.

## முதலாவது

## காப்புப் பருவம்.

### திருமால்.

திருவுறை செழும்பதும மார்பினிற் றேங்கலுழ் திருத்துள வலங்க
லாங்குஞ், செங்கண்மாலைப்புவன மெங்குளபல் லுயிர்களுஞ் சிந்தைதள
ராது கருணை, யருள்விழி பொழிந்துண் டுறங்கும் படிக்குநின் றகிலம்பு
ரக்குமிறையை, யஞ்சனமி லைஞ்சகரு மஞ்சனவி சஞ்சலநி ரஞ்சனனை
யஞ்சலிப்பாம், முருகவிழ் கதம்பமஞ் சரிதுதையுமீராறு மொய்ம்புமுறை
தக்குபடையு, முழுமதிய மாறனைய திருமுகச் சோதியு முழுக்கருணை
விழிமுனான்கும், பொருகய லிரண்டனைய விழியுமை யிடத்துவகை
பொங்கத் தவழ்ந்துமூரல், பொதிநிலவு கொம்பளிக் கும்புனிற்றின்மடப்
புதல்வற் புரக்கவென்றே. (க)

### பிரணவம்.

அறுபதப்பொதியுடற் கழல்விழி வரிச்சிறைய வரிபிடரின் ஞிமிறு
ஏமூறி, யம்போ ருகச்செறிய நாண்முகை முறுக்கவிழ்ந் தலரப்பிலிற்று
றேறலையுண், டொறுமிசைத் தொழில்பயின் றுடகப் பூண்மிஞூர் துணை
விழி யெனக்கடுக்குந், தோடவர்க லாரமிசை துயிலரத் தாத்திரிச் சூர்ப்
பகைவனைப் புரக்க, மறைமுதற் றிசைமுகக் கடவுண்மொழி யச்சுருதி
வண்மையுரை புகறியென்று, வன்சிறைக் கூடத்து வைப்பமான் முதலி
யர்ம யங்கவெள்விடையூர்தி நீ, யுறபொரு ளுணர்த்தவென வடிகளா
யவனடிக் கோங்குதிரு வடிசூட்டியே, ஒப்பரிய நெறிவேத னருள்
செயும் பிரணவத் தோரெழுத்துற்ற பொருளே. (உ)

### நாரிகணபதி.

தான தன்தன தான்தன்தன தானதனதன தாந்தன.

தோகைமயினட மாடமழைமுகில் சோலைதொறுமுழ வார்த்தெழத்
தூமெனறுமலர் கோதுமளியிசை தோடிசுதியொடு பாட்டயர்
நாககிரிமிசை மேவியெமதிடர் நாசமுறவொரு கோட்டடர்
நாரிகணபதி பாதமலருள நாடிமகிழ்கொடு போற்றுதும்
பாகின்மொழிமலை மாதுகவுரியோர் பாகமுடையபி ரார்க்கெதிர்
பாரமயின்மிசை யேறிநொடியொரு பாதிசெல வெழுதாத்திரி
யோகையொடுவல மாகவரவிறை யூறுகருணையி னுற்றழீஇ
யோசை பெறுகனிநீயென் முருகனை யூழிமுறைமுறை காக்கவே(ங)

### வேறு—பிரமன்.

கோதண்ட பாணிநெடு மாபித்தடம்பூத்த கோகனக மலரின் வைகிக், குலவு புவனமுமண்ட பகிரண்ட மூதண்ட கூடமுமமைத்ததன்கண், வேதண்ட மதமா முதற்பிபீலிகைகடை விரிந்தொளிர் சராசரமதில், யேவுயிரனைத்தும் படைத்திடு மொருத்தனிரு மென்பதத்தன்புபுரிவாம், நாதண்டு வெட்சிப்புயாசலனை முக்கணன் மருபனிரு மாட்டத்தினைத், தமரவேலையுமேஞ் சூர்முங் குருஞ்சைலமுமடர்த்தசெங்கைப், போதண்டு சத்தியனை முத்தமிழ் முனிக்கருள்செய் புங்கவனை யெங்களரசைப், பொறிபடப் பணிகிரியின் வாமபாகத்திறைவி புதல்வர்ப்புரக்க வென்றே. (௪)

## தேவேந்திரன்

### வேறு.

*தனதன தனதன தனதத்த தத்தனன.*

கரைகவுழ் மதமலை யருவிக்கொதிர்த்திகச்செய்
களிறுக டவிவரு ககனத்த வர்க்கிறையை
வரைசிற கரியுமொர் வயிரத்த டக்கையனை
மகிழ்வினொ டனுதின மனதிற்றுதித்தெழுதுங்
குரைகட லகடுகி ழியவிட்ட சத்திகொடு
குலகிரி யொடவுணர் குலமுட்கி டச்சமர்செய்
சரவண பவனைவி ணமார்க் கருட்கருணை
தருமழ குழவியை யினிதிற் புரக்கெனவே. (௫)

## கார்த்திகை மாதர்கள்

### வேறு.

விண்முக டளர்தக டுழக்குஞ் செழுஞ்சாலி விளையுங்குரற்கற்றைமா, மேருவரை சூழ்வருந் தபனனிரதத்திட்ட விற்பசுந்தூக்க நிகராப், பண்முக மிழற்றளி துவைத்தபைம் பொற்றுறு பாசடையின் மிசையுதிர்க்கும், பருஊக் கருங்கோட்ட சுரபுன்னைசெறி பணிமலைப் பரன்மதலையைப் புரக்க, மண்முதல் விளங்குமிரு நாற்றொ டிருபானுன்குவகைய புவனத்துயிரெலாம், வழிவழிபயந்தினந் தெருளாத கன்னியாய்வளர் சரவணப் பொய்கையின், கண்முகையவிழ்க்குஞ் சரோருகப்பாசிலைக் கண்பயந்திடவறுவர் போய்க், காலையினெடுத்துமுலை யமுதருத்திப்பொங்கு கருணைமொழியனை களிப்பே. (௬)

## நாமகள்.

மறிதிரைக் கார்க்கட லுடுத்தபார் கண்டமுது மான்மகற்குறுதலை வியாய், வாலிதழ்ச் சததளத் தம்புயத் திடைவந் துவந்கலை யனைத்து மோர்ந்து, பறிதலைக் கண்டகர்த ஞெயகன் றானடி பழிச்சேத்து மா வதிர்ந்து, பாகைவரு சிவஞான வாரிதிபணிப்பவென் பாலனட னறிவறிவு நீ இச், செறிதமிழ்க் கலைபல வுணர்த்திவாழ் வித்துலவு செந்தாமட்டைத்தை பதுமச், சீரடி யுளங்கொண்டு முப்பொழுது மேத்துதுஞ் செவ் கோட்டு வளர்குமரனைப், பொறிமயிற் பரிவூர் விசாகனைக் கந்தனைப்புத் தேள்வலாரிபாவும், புதுமலர்ப் பதயுகளவுரககிரி முருகனைப் புனிதனைக் காக்கவென்றே.
(எ)

## அழகு நாச்சியார்.

### வேறு

**தன்தன தானன தனதந்த தந்தன.**

புகலிட மியல திலைமற்று னக்கெதிர் புகலவு மாவிலையெனவுட்டு மட்கிடு, பொழுதினில்வாலுளை யரியுற்றிகைத்திகல் புரிதுவன்யானென வெழுமுற்கதத்துட, னகல்புவி வானுல கடையச் செருச்செயு மார்மு ஞேடி வென்னிடமுத்தலைக்கழு, வடல்பயில்தாருகன் மருமத்தழுத்திய வழகிய நாயகியடியைப் பழிச்சுதும், முகில்புரை மேனியர் வெவொளிற் றாக்கிதன் முலையிணை நாசியு மரியச்சினத்தொடு, முனைகா தூடணன டன்முச் சிரத்தவன் முடியறவோர்களை முடுகித்தசச்சிர, னகலமு நீடனுசனுமிக்க புத்திர ரெனவருமாருபி ருகவெற்றி ட்டபண், ணவர் பணிமாதவனரிசக் கரக்கர னழகிய கேசவன் மருகற்புரக்கவே (அ)

## சத்த மாதர்கள் முதலியோர்

### வேறு.

கலைவாணி வாராகி கௌமாரி யயிராணி கண்கண்மூன்றுடைம கேசி, காத்தளிக்கின்றவை ணவியுடன் சாமுண்டி கழுறமெழு மாத ரோடு, நிலமேவு நால்வகைய முப்பத்துமூவர்க ளெண்ம்பொன் னிலக் கடவுளோர், நீர்மலி சரோருகத் தாண்மலர்களன்பினெடுமொஞ்சமசலாது வைப்பாங், கொலைமேவு கடாக் கடாங்கவிழ்த் திறியுற்குறுங்கவுட்செறி கிம்புரிக், கூர்க்கோட்டு வெண்ணிறக் கோக்களி றுவந்தின்றகூர்ந்தலம் பிடியையம்பொன், மலைமேவு திண்புயத் தகலம்புணர்ந்தசிறு மதலைப் பசுங்குதலைவாய், மதகளிற்றுக்கினைய மழகளிற்றைத்தினம்மகிழ்ந்தினிது காக்கவென்றே.
(க)

## அஷ்டவயிரவர்.

நீர்முக்குலைக்குதலி யொட்டிலைச் சுருணெடுந் தாழைப்பசுங்குரும்பை, தவழ்குறுங் கார்ப்பைஞ் சிறைச்செழுந் திர்முகச் சாறுவிண் மிசையெடுத்த, கீற்றுப்பசுங்காம்பி னச்சுக்குழற் பொருகிளர்குலைச் செபழுக்காய், கேழொளிய வுண்டைசெய் தமைத்தெரோக் கும்பணைக் கிரிக்குமா னைப்புரக்க, ஆற்றுச் செழுஞ்சடை யொருத்தன் கடைக்கால கண்டபகிரண்டாண்டமி தனைத்துயிருமுண் டிடரினைக்குராண் முத்தலைய வைநுதிச் சூலமே தி, வேற்றுப் பருத்தநவெடுத் தூர்ருவாணையாய் வேதன் கபாலக்கொடு, வெண்பொடி திமிர்ந்தழ னடக்குந் துணைச் சரண் வியக்கும்வயிரவரெண்மரே. (௰)

## தெய்வயானை.

### வேறு.

ஒாரும் வடமூர்த்துதைந் தசைய வளருங் குரும்பைக் களபமுலை வனசமலர்மண் டபமிருந்த வனிதையுறையு மறைத்துளபத், தாருமணியும் பிறழ் மருமத் தாமோதரன்றன் மருகோனைத் தரைவெண்மணி மால்வரைவருசேந் தனைக்கடனைக் கணைக்காக்கப், பாரும் விசும்பும் படைத்தளித்துப் பயின்றுண் டளிக்குமொரு மூவர், பரிவினுதவும் பெருவரமும் பலகையு நிசிதர் குழுவுமறச், சீருஞ்சிறப்பு மகபதிக்குச் செருக்கா னயந்து திருமணஞ்செய், சிறுகட்டகளக் கரிணிதருஞ் சிறுமி பெருங்கற் புடைமையதே. (௧௧)

## வள்ளி நாயகி.

அழற்கட் பொருந்துநுதற்பெருமா ளசலமயிலுக் கொருபாக, மளித்தற் பொருட்டாற் கயிலைபிரிந் தணிகூர்கச்சிப் பதிநண்ணிப், புழற்கட்டிமர்ந்து பணிவரையிற் போதென்றருளாச் சிவையவணம், புகுமுற்புகுந்து பரன் மலர்த்தாட் பூசைபுரிவோன் றனைக்காக்க, குழற்கட் டெவர்ச் செவ்வாய் மடுத்துக் குழக்கன்றினங்கா லிபரிரையு, குழுமிக்குழுமிச் செவிமடுப்பக் குறிக்குஞ்சாதாரியை மதலை, நிழற்கட் சிறந்தோர் பதங் குனித்தன்னிலைமின் றிசைப்போன் றிருவுதர, நீத்துக்குறவர் தழைக்குரம்பை யிலைப்போ டிருமங்கல னாணே. (௧௨)

## வேலாயுதம்.

கடிபார் நினைவின் டொழுகுறும்பொற் கடவுண்மதலைச்சடைப்பெருமான், கவுரிக்கொருபாகங் கொடுப்பக் கலந்தீருருவோருரு

வாய்கின், றடியார் பரவு மபிராமத் தருள்கூர்ந்தமரும் பிரம நகத், தண்ணம் குமரப்பெருமாளை யலர்ந்தோர் துணையைத்தனிகாக்கப், படியாதெழுந்த மீச்சடையும் பார்கீண்டிழிந்த கீழினரும், படித் தப்படிவக்கோக்கவுணப் பகையும் பரவைக்குலமுழுதும், விடியா வி நண்மாயைக் கிரியும்விழித்துகளாம்படி யுமையாள், விதித்துத் தனது திருப்பெயரால் விதித்துக்கருஞ் செவ்வேற்படையே (௧௩)

## தகர் வாகனம்.

### வேறு

காமர்வெண் டிங்களங் குழவிதவழ் கொடுமுடிக் கதிர்மணிச் சிகரகூடக், கனபணக்கட்செவிக் கார்வரைக் கிறைவனைக் கந்தனைக் குமரவேளைத், தாமரைக் கண்ணனின் னன்புரி பலிகொண்ட சாம் பவி யிடப்பாகனர், சார்வுறும் விண்டுகிரிவளர் கார்த்திகேயனைச் சண்முகனையினிதுகாக்கப், பூமகன் வழிவந்த நாரதப்பேரிருடி பொருவருங்கிருது வேட்பப், பொற்பினுயர் பொருவலிய வரு மறைத்திருவுருப் பொலியவங் கழலுதித்துக், கோமதப்பேரருவி வெள்ளம் பாகதிழி குறுங்கவைக்காற் றழற்கட், கூற்றுயிரங் குடி யிருந்தனைய திரிபுரிக் கோட்டுவெண் டகரின் வலனே. (௧௪)

## எழுபெயர்ப் பெரும்பதி.

### வேறு.

அண்ணற்படிவப் பசுநிறத்த வம்பொற்சிமய மடவரல்சேப், பமைத்துப் பணைத்த முதுகுற்கொண் டடிபாரித்த களபமுலைக், கண்ணுய்த்தரு டம்பால்பருகிக் காத்துமரத்துர் தோண்மீதுங், களிக்குமொரு செஞ்சுடர் மணியைக் கதிர்வேன் முருகன்றனைக் காக்க, விண்ணத்துயரும் பிரமகிரி விண்டுவரைதுற் காசலங்கார், விடங்கூருரகப் பெருநாகம் விபுதர் பணியோரகங்கோதை, மண் ணிற் றமிழ்மூவரு மொழியுங்கொடிமாடச்செங்குன்றூராய், வழங் கித்தொழுவோர் பழயவினையை மாற்றுமெழுபேர்ப் பெரும்பதியே. (௧௫)

## மலை காவலர்.

தனனு தனனு தனனு தனனு தனனு தனனு தன

அகல்வா னளவாய் நிவர்தா ழையிமேடலர்கே சாமீதெழா,

வடர்சோலையினூ டுலவோர் சிறுகா லணிவீதியின் வாய்புகா, மக டாடவர்மோ கமொடே மகிழ்கூர்மணநா டொறு மாறலா, வளர் கோதையுளான்முருகோ னுறைமால்வரைகா வலராயினோர், புகல் நீள்கவிஞர், யவனொருவே புனைபா தகராயினோர், புவிமீ தான் மால் பதிசேரவு மோர் பொதியா யடுவேலைவாய், மகதே வர்பகா பதியீ தழிபாவருபோ தயிர்போயினோர், மகவா னரசோ டிகலா வுலகாள் மலைகா வலர் மூவரே. (கசு)

காப்புப் பருவம் முற்றிற்று.

---

உ-வது

# செங்கீரைப் பருவம்.

வேறு.

மைக்குன் றிடைச் செக்கர் வான்பரந்ததனுழை வயங்கிய சுடர்க்கதிரென, வான்றிருவு நச்சரோ ருகமார்பகத்தின்பமா மணி மாதவக்கடவுளுங், கைக்குஞ் சரத்துரி புனைந்துவரி யுழுவையதட் கஞ்சுகி யணிந்தமதலைக், கடவுளுந்தனியுவப் பக்கருணை வெள்ள மிரு கட்கடை பொழிந்தொழுகவெற், பொக்கும்புயங்குலுங்கத் தாளுதைந்துவயி றெக்கி யிருகர மூட்டியுற், றொளிமிகுங் கந்தர நிமிர்த் திதழ்குவித்தம்மை யுடனெக்க வுலதுப்பவெண், டிக்கும் பரந்திசை விளங்கமணி வாய்விண்டு செங்கீரை யாடியருளே, செந் திருவுவந்தபணி மந்தரமமர்ந்தகுக செங்கீரை யாடியருளே. (க)

வஞ்சப் பெரும்பிணிக்குறு மருந்தேயம் மருந்துவந்துதவு குணமே, வண்குணக் குரவர்புரி தவமேதவத்தவர்கை வருபெரும் பேறேயருட், டுஞ்சுற்ற வப்பேறளிக்குமொரு காட்சியே சோர் விலக்காட்சி யொளியே, துவக்கரும் பேரொளியினுருவமே யருவமே சொற்குரியவுருவருவமே, கஞ்சப் பொகுட்டலர்த் திசைமுகத் தருமறைக் கடவுணவில் வடமொழியெலாங், காகத்தின்மொழி யெனக்குயிலிசைய வினியமொழி கருதிமூவரு முணர்கலாச், செஞ்

சொற்றமிழ்க் குறுமுனிக் குணர்த்திய வறிஞ செங்கீரையாடியருளே
செந்திருவுவந்தபணி மந்தரமமர்ந்தருக செங்கீரையாடியருளே (௨)

குடகுவடிடித்துத் தளிர்த்த சந்தனவனங் குவியத்துமித்
தொடித்துக், குறும்பலவின் முட்குடக் கனியுடைந் தாயர்வரைக்
குறவர் குடில்சூறையாடிப், படர்கொலை யிபக்கோ டுதுக்கிவெண்
டாளமும்பணைவெடித்துமிழ்முத்தமும், பைப்பணச்சுடிகைப்படப்
பாந்தளீன்றமணி பைஞ்சிறை மயிற்பீலியு, மடையவும் வரன்றித்
தழைக்குடில் சிதைத்துமழை யருவிவெள்ளந் திரட்டி, யயலிரு
கரைக்குரம்பழிபப் பெருக்கெடுத் தாறலைத்தடவி சாய்த்துக்,
திடப்படவரைக்குவடு ளக்குபொன் னித்துறைவ செங்கீரையாடிய
ருளே, செந்திருவுவந்தபணி மந்தர மமர்ந்தருக செங்கீரையாடி
யருளே' (௩)

குறுந்தாட் குடச்சோதத் தற்றிருகு புரிநுரைக் கோட்டுக்
கருங் கவரிவாய், குதட்டுஞ்செழுந்தா மரைப் பொருட்டுகுகின்ற
குளிர் முத்தாறணு கிடைபொரு திறுத்தாழ் குழற்சுமை முலைச்
சுமை மிரப்பார மென்று நூபுரமிஞ்ச, விளமழ வனப்பேடையென
நனிநடந்து செலுமேந்திழை மினார்களணியப், பெருந்தாழ்வடத்
தாளமும் புடவியுநிவிற் பிறங்கமல நறவுபாய்ந்து, வெய்வளைக்
கைக்கடைசி மார்கடப்பருவம் பிறந்துவிளை செஞ்சொலியின், செறு
தாளரிந்போரிடுமே ரகத்தரசு செங்கீரையாடியருளே, செந்
திருவு வந்தபணி மந்தரமமர்ந்தருக செங்கீரையாடியருளே. (௪)

துத்திப்பை நாகப்பணச் சுடிகை யிற்கதிர்ச் சுடர்மணித்
தொட்டிறுயிலுந், துயிலுணர்ந் திருதாளுதைந்தளவி னன்னை
யுமை துகில்வளைக்கர மொதுக்கிப், பத்தித்துவர்க்குமுத வாய்
மலர்ந் தேனெனப் பங்கயானன நோக்கி நீ, பசியாகி நின்பெரு
விரற் சுவைத் தழுதுமெய் பதைப்பச் சிரித்திகழ்குவித், தத்தத்
தெடுத்துக் குடங்கையிலணைத்துமுலை யமுதமுன்பிர் போக்கிமற்,
றருத்திக் களத்திடைய முக்குத்துடைத்துமீண் டணைபாடை மீப்
படுத்தச், சித்தக்களிப்புடன் விளையாடு சிறுமதலை செங்கீரை
யாடியருளே, செந்திருவுவந்தபணி மந்தர மமர்ந்தருக செங்கீரை
யாடியருளே. (௫)

## வேறு.

அறுகாற் சுரும்பாற் குடைந்துமுகை யவிழ்க்குஞ் சடைப்பா சடைக்கமலத், தலர்வாய் பிலிற்றுஞ் செழுந்தேற லகல்வாணிடுவிற் கொருகணைவாய்த், திறுகால் கிளைத்துவளர் கணையின்றாற்றிற் பரந்து பசும்புனிறை, துணைத்தாளுழுநர் குயந்தீட்டுஞ் சுரிசங் கிளத்து வரம்புதத்தி, மறுகா நடவுநடுஞ்சேற்று வயலிற்புகுந்து முடிபுனைந்து, வழிந்துபெருங் கால்வழிமடுப்பமலர்த் தண்டலையின றைமுகந்து, சிறுகானடக்குந் தமிழ்க்கோதைச் சேயேசெங்கோ, செங்கீரை, தேவர்க்கமரா பதியளித்த தேவேசெங்கோ செங்கீரை. (சு)

வார்க்குங் குமக்கோட்டிள முலைக்கு மலர்ப்பூம் பிணையற் கருங்குழற்கு, மருங்குறுவண்டு நுடங்கிடவே மழவோ கிம்பி னடையபில, ஆர்க்குஞ்சிலம்ப சிலம்பமணிய ணிமே லைலயிலம் பலவிய லம்ப, வசைந்து சிறுகாற் பொசிபொலங்கொம் பன்னார்பெருகி நடைபெயரல், போர்க்கின் றெழுதற் கிருஞ்சிலைவேள் புறப்பா டெனமுன்றா துணர்த்தல், போலுமறுகாற் கருஞ்சுரும்பர் புரி பாண்மடவா ரியற்றிசைநேர், சேர்க்குந் தமிழ்க் கோதைப்பதி வாழ் சிறுவா செங்கோ செங்கீரை, தேவர்க்கமரா பதியளித்த தேவே செங்கோ செங்கீரை. (எ)

## வேறு.

விரிக்குங் கலபப்பைந்தோகையின்மணி மிடறுபழுத்தனைய, மிளிர்பாசொளிமர கதமகரக்குழை மென்காதூதாட, நெரிக்குஞ் சிறுகுஞ் சியினணிசுட்டியி னெட்டிதழைந்தாட, நிலவுமிழ்மதிமுக மண்டல மோகையி னிகழ்புன்னகையாட, வரிச்செங்கமல விழித் துணைகருணை வழிந்துபெருக்காட, மார்பிடை தவழும தாணியோ டங்கத வாகுவசைந்தாட, அரிக்கிண் கிணியரை ஞாணொலியாடிட வாடுக செங்கீரை, யாரண நூல்பயி லேரகநாயக வாடுக செங்கீரை. (அ)

பொங்கர வத்தொளி பூத்தபணாமணி புதுமழவெயிலுறழப் பொதியூ ஞெடுதவழ் சுரிமுகவால்வளை புணர்முதிர் சூலுளையா, வங்கநெடும்புவி யீன்றிடுவெண்டா ளத்தொளி நிலவுமிழ, வரை

யொர் பதத்தெழு பரிதியுமதியு மகன்றுயர் தண்டலையிற், றங்கி ருள்சிப்ப நறும்புனல்வாவிச் சலசங்குவளைமுகை, தனியவிழ்தரவு ளயிர்த்திட மால்வரை தலையபுதுப்புனனீர், அங்கரை மோது பொன் னித்தண்டுறையின னடுகசெங்கீரை, யாரணநூல்பயி லோர கநாயக வாடுக செங்கீரை. (௯)

கண்டன் முடித்தலை தருமுண் மருங்கிதழ் கமலமலர்க்கிழ வற், கரிகூறியகொடு முனிவொடகன்றுக னற்கிரிவப்பெருமான், துண்ட மதிப்பிளைவண்டுமு கொன்றைத் தொடர்வெளிணர்ப்புன் னை, தொக்குறெ ருங்கியசெஞ்சடையூடு துளும்பி யலம்புதுறை, மண்டுதி ரைப்புனன் மந்தாகினிநதி வந்தவடித்துணையம், மா வெலி முன்றிலிரந்துநடந்து வளர்ந்தநெடும்படிவத், தண்டமலர்ந் திகல் கொண்டல்வணன் மருகாடுக செங்கீரை யாரணநூல்பயி லோரக நாயக வாடுகசெங்கீரை. (௧௦)

செங்கீரைப்பருவ முற்றும்.

---

ஆகச் செய்யுள் உ௮

௩-வது

# தாலப் பருவம்.

வேறு.

வெளிவான் றடவும் பசுங்கமுகின் மிடறுகிழிக்குஞ் செழும் பாளை, மேருவலஞ் சூழுறுங் கதிர்கால் விகர்த்தன் பசுங்கொய் யுளைப்புரவிக், கொளிர் சாமரையின்புடை யிரட்டி யெழுவெண் மதி போழ்ந்துடைந்த முத, மொழுகல் பொரத்தாழையின் குரும்பை யுடைத்துச் சிறுபுன் குரங்கயில, அளியாண் மிழற்றுந் தண்டலையூ டலர்வாவியின் மீன் றாண்டிலறுத், தகல்வான் வெடிபோன்றிழி மறுகி னரம்பைக் குலைப்பைங்கனியூழ்த்த, தெளிதேன லவனயில் கோதைச் செவ்வேள் தாலோ தாலேலோ, செங் கோட்டிறைவர் மங்கையுமை சிறுவா தாலோ தாலேலோ. (௧)

பண்டைப் பழநான் மறைநவிற்றும்பதிபின் பசுபாசமுமாக்கி, பண்பாந்தளின் மோட் டிருஞ்சூட்டுப் பரிக்கும்புவன மனைத்தினு ளுங், கொண்டெப்படிமுன் றொடர்பாசக் குறிப்பின்வழிபக் குவ ராகிக், குணமு நிறமும் பலவழியாய்க் கூறுஞ்சமயர் தமின் மயங் கக், கண்டித்தருமா மறைக்கிழவன் கடிபுக்கிடவைத் தெவருளத் துங், கருதற்கரிய பொருட்பணிப்பூட் கடவுட்குரைப்பத்திருவுரு வங், கொண்டப்படி வந்தெனையாண்ட குழகாதாலோதாலேலோ கோதைப்பதிக்கும் பரங்கிரிக்குங் கோவே தாலோ தாலேலோ (௨)

நறவுகமழ்முட் டாட்கமல நாட்போதுகுத்த பசுந்தேற, லூ ரத்தடத்தி னுவட்டெடுத்து நறைக்கானடவு வளர்த்தயலிற், புறவு பரந்த சடைப்பழுத்த புறமுட் கனியூழ்த் தழிகடிநீர், புணர்ந்தூற் றெடுக்கும்பெரியாறு புடையிற் கருங்காற் கழைசாடிச், சுறவு முகந்து வாய்மடுத்துச் சுவைத்துண் டகத்துக்களிபெருக்கிச், சுரிச் சங்குடைத்துப் புதுப்புனனீர் துறைசேர் பொன்னிக் கலவமலைக், குரவரயினீர் நறைகெழுமு கோதைப்பதியாய் தாலேலோ, கொடி மாடச்செங் குன்றூரா குமாரா தாலோ தாலேலோ. (௩)

புழைமாறடக்கைக் கறையடிக்கும் புரிக்கோட் டயிராபதப் பாகன், புரிபேர ரசுநெடும்பதியும் பொலிவுமிழந்து கடிபுகுந்த, முழைவாய் பொருவுஞ் சிறைக்கூட மூரிக்கதுவந் தாட்டிறந்து, முன்னைப்பதியும் பேரரசு முடியுங்கொடுப்ப வவன்பணிவுற், றிழை பூண்டுவள் குங்குமச்செழுஞ்சே றெக்கரிடுபொற் கலசமுலை, யே லக்குழற்பூம் பிடியைநல்க விழைந்த மணங்கூர் குழகவளர், தழைபூந்துறை நாட்டவர்தொழும் பொற் றுளாய் தாலோ தாலே லோ, சற்பகிரியாயற்ப விடைத்தையன் மதலாய் தாலேலோ. (௪)

அலர்பூந் துணர்க்கற் பகநாட்டிற் கரசுபுரியுஞ் சதமகத்தோ, னவுணர்வலத்தா லீடழிவுற்றம்பொற் கிரியைத்தனிக்குனித்த, சிலை யான் கயிலையடைந்திரப்பச் செங்கைப்பாசோ னிர்த்தியத்தைத், தே வர்க்கிறைவன் காத்தளிப்பச் செழுமாதவர் பன்னியர்க்குதவ, நிலை யா வகழ்நீர்ச் சரவணத்தி னோர்ந்து டயந்துதமினகல, நிமலை யெடுத்து முலையருத்தி நிவர்தாளுடறைவர வளர்ந்து, தலையா றி ருமுடி விரட்டியுறுந் தடந்தோண்முதலேதாலேலோ, சங்கத் தமிழ் தேரியற் கோதைத் தலைவா தாலோ தாலேலோ. (௫)

வேறு

வண்டலிழைத்திடு தண்டுறையிற் புனல் வழியிற்சுழியிற்றே
மாகிழலிற் கமுகாடவியிற் குழன் மான்மதகிற் கயலே
தெண்டிரையெற்றி வழிந்தபுலிற்பொலி செஞ்சாலிச் சிவையிற்
றேமலிவாசப் பூமலிவாவித் தின்கரையிற் றரையிற்
பண்டெரி வண்டுக ளுண்டு திரண்டெழு பைம்போதிற் றுதிற்
பதுமத் தலரிற் சினைமுற்றுமுடப் பணிலக் குழுவேறி
தண்டர ளஞ்சொரி யும் பொன்னி நாடா தாலோ தாலேலோ
சற்பகிரிக்கும ரப்பெருமாளே தாலோ தாலேலோ. (சு)

சுடர்மணி நான்முறை யுணரும்வ ளஞ்சியர் தொல்குடியிற் றோன்றிச், சொற்றமிழ் தேர்வுறு பொருணிலைவழுவத் தொல்வழு தியர் கோமா, னுடைய பிரான்கோ யிற்படி வாயிலி னொருதிரு முறையுய்ப்ப, வுழையணி செங்கைய னன்பினைந் திணையென்றோதி யதுணர்வரிதாய்ப், படர் தமி ழுணர்சங் கத்துறைபாணர் முதற் புலவோர் வினவப், பரனருளானுரை பகர்புலவாதண் பாசடை நளினமலர்த், தடமலிகோதைப் பதிவளர் முருகா தாலோ தாலே லோ, சற்பகிரிக்குமரப் பெருமாளே தாலோ தாலேலோ (எ)

குரவமுதிர்ந்த பசுந்தண் டலையின் குளிர்நிழன் மயிலாடக்
குழைதளி ரீன்றவ பூட்பல வூழ்த்தொளிர் குடமுட்கனிபீறி
கரியமுகத்த முசுக்கலை கூவிள மந்திகரத்து தவக்
கண்ணுறிளம் பறழ் சென்றுகை பற்றிக் கடிதுபரித்துணவும்
பரிவினொடக்கடு வன் பொலிபொற்சுளை பற்றியெடுத்துதவப்
பாணிறவெகினப் பேடைசே வலுமெதிர் பார்த்துளுவந்துநகத்
தரணிபணிந்தெழு கோதைப்பதியாய் தாலோ தாலேலோ
சற்பகிரிக்கும ரப்பெருமாளே தாலோ தாலேலோ (அ)

வேறு.

குரைதிரை புரட்டிநறு முகைகரை படுத்துமொரு குளிர்சர வணப்பொய்கையினோர்கூலங், குலவுமசுகுத்தவிலை தரைபடிவுறிற் பறவை குடைபுனலுறிற்கயல்தாமோர்நாட், பரவொரிலை மட்பகுதி யறல் பகுதியுற்றவது பறவையுடலுற் றவுடலொர்வேறு, பறவை

வெளிபற்றமறு கயல்புனவிழுக்கவது ளயிர்கொடுறு நிட்டைகெட மாமுக, மருளினெடுத்துமலை முழையினிடவச்சமொடு, வரைப கடுவடுத்தவயில் வேல்பாடி, வடிதமிழுரைத் தமுது புலவனையளித் துரியவாமுமுதவிச் சொன்மொழிதாவாது, தரையினடியர்க்குதவி யருண்மடையுவட்டியுயர் தழைபணிகிரிக்கிறைவ தாலேலோ, தலையருவி வெற்பினுயர் குடுமியை மொடித்தவனி தவழ்வரு,பொனித் துறைவ தாலேலோ (௯)

குளிர்நிழல் பாப்புபொழி னறுமலர்மதுத்துளிகொள் குறு முகைவெடித்தபுனை நீடாது, கொடிபடு நுசுப்புவறி திறுமென வடிக்கடிமெய் குலைபரி புரத்தினெலிநேர்கூறக், களிகொடளிபடகு மிறுமலர் ததைய நெய்த்தகுழல்கருமுகிலெனப்பசியவார்தோகைக், களிமயினடிப்பவிழ வணிதெரு நடித்துலவு கயல்விழிமடக் கொடி நல்லார்பூசு, பளிதநறை துற்றியெழு முறைமுறையரைத் தொளிறுபசியநிறமுற்று சுணமேமானப், பணைகளை பறிக்குமன நடைபயிலுழத்தியர் கைபடர்கவடு விட்டுவளர் தேமாவின், தளி ரெதிர் சிவக்கொளிரு முருகசயிலத்தமுது தமிழுரை விரித்தருக தாலேலோ, தலையருவிவெற்பினுயர் குடுமியை யொடித்தவனி தவழ் வருபொன்னித் துறைவதாலேலோ (௧௦)

தாலப்பருவ முற்றிற்று.

---

ஆகப்பருவம் ௩-க்குச் செய்யுள் ௩௯.

௪-வது

## சப்பாணிப் பருவம்.

வேறு.

வரிச்சரிமுகக்குடக் கூன்பணிலமுதிர்குன் மலிந்துவயிறுளைய வோடை, வளர்குளிர் வளைப்புகக் கீமடமள்ளாற்புக வளைந்துசெஞ்சாலி படியப், பருத்தகதலிக்குலையி னேகவக்கனிவிழப் பலாமுட்புறக் குடக்காய்ப், பசுங்கனியுடைந்துதேன் கொப்பளிப்பச்செம் பழுக்காய்க்

குறுங்குடும்பு, தெருக்குற வுழுங்கடைஞரலம்விடக் கடைசியர் தெரிந்தச் சமுற்றகல நீ, ணெடுவரா லுகளுந் தடம்பணை வெளிடையற நெருங்குறப்பார்ப்பொடன்னநந், தரிக்குநளினத்தடஞ் சூழ்தமிழ்க் கோதையாய் சப்பாணிகொட்டியருளே, சயிலமகளுக்குமந் தாகினிக்குஞ் சிறுவ சப்பாணி கொட்டியருளே. (௧)

பொருமாறடக்கரிக டாங்கவிழ்த்தனமழைப் பொங்கருவி தூங்குகுடுமிப், பொன்னம் பொலங்குவட் டயர்குறவர் வள்ளிப்புதுக்கிழங்ககழவேனற், றருமாவெனப் பழயமுதுகிழங்ககழ்கின்ற சாரலிற் புண்டரீகந், தவழ் பறழ்க்கின்னமுத முலையருத்திப் புதர்த்தனித்துயர றத்தேம்பழுத், தொருமா பணைப்பூவுமொரு கவட்டுறுவடிவு மோர்சாகையிற்காயுமற், றோர்கனியுமா யும்பர் நாட்டுயர்தருந் தருவினுதவி யாணர்க்குமரிதாய்த், தருமாவிளங்குசெங்கோடாளு மொருமதலை சப்பாணிகொட்டியருளே, சயிலமகளுக்குமந் தாகினிக்குந்தலைவ சப்பாணிகொட்டியருளே. (௨)

முதுமறைத் திசைமுகப் பதுமபீடிகையின்மா முனிவரனுதித்த செங்கேழ், முளரிப் பொருட்டுந்தியந்த டம்பூத்துயர் முராரிமகிடாரி நாகம், விதிமுறை யியற்றுபலி கொண்டுதனையரையுதவி மிளிர்வந்தியா குன்றமும், மிகுகுருகுலத்தைவர் வதிகுன்றமுங்கூனன் மென்கிடை பிலத்துவாரம், நதிதருஞ்சாரறிக் கெண்ணுயிரஞ்சுனை வயக்குழியு மெங் ணைதிருமெய், வழிவரைஞ் சோதியெதிர் கூவமுங்கேணியும் வாவியு மருங்குசூழ்ந்து, தைவரும்நெடும் பாந்தளங்கிரி யமர்ந்தருக சப்பாணி கொட்டியருளே, சயிலமகளுக்கு மந்தாகினிக்குந்தலைவ சப்பாணிகொட்டியருளே. (௩)

குறுநடைப்புறவினுக் குறுசிறைபுக்கவக் கொழியகோமகன்பார்க் கொடுங், கோல்களைந்தரிய செங்கோன்முறை நடாத்தக் குறுங்கவைக் காற்கரும்போத், துறுகுளம்பெறிசே தகவாறுதிக்கலவை யுழவன்பதத் துணைச்சே, றுன்துபரிவட்ட நனையக்கண்டிதென்கொலென் றுள்ள நீ யசரீரியாய், மறுவறுகுணத்தன்முன் வருநெறியுரைப்பவம் மன்னன் வேளாண்டலைவனுர், வன்கலிகடிந்து திருவுதவ வருள்கூர்முருக வாணிறக்கூர் மருப்புத், தறுகண்மால் யானைவளரே ரகத்திறைவனே சப்பாணிகொட்டியருளே, சயிலமகளுக்குமந் தாகினிக்குஞ்சிறு சப்பாணி கொட்டியருளே. (௪)

கடவுட்கொழுந்தாழை பாளைவிட் டுன்றபைங் காய்க்குலைமுறிந்துசிதறக், கவட்டுக்குறும்பலா வூழ்த்தமுட்கூன்குடக் கனியுடைந்திட வாழையின், படுபொற் கனித்தாறுதிர்ந்து வீழக்கரும் பச்சிளங்கன்னல்

வேலிப், படப்பைகீழ்படியத் தடத்துமீன் றாண்டிற்பறித்துவெடிபோய்
மீண்டுசென், றடைநெற் கதிர்ப்போர் துதைத்தயற் சாலிவய லள்ளற்
படுத்தி யுகளித். தாற்றிற்படிந்துபெரு நீத்தத்தினிருகரை யலைத்துவரு
பொன்னிநாட, தடவச்சினைச்சூத வனமருவு குமரேச சப்பாணிகொட்
டியருளே, சயிலமகளுக்குமந் தாகினிக்குந் தலைவ சப்பாணிகொட்டி
யருளே. (ரு)

## வேறு.

மண்டியகார்புவி கண்டவனீடுரு வங்கொடு வேலைமுநீர்
வந்துபடிந் தறலுண்டுலகுண்டவன் வண்கொரு பா கோடுந்
தண்டமெழுந்து செயுந்தருமந்தவ மம்புவியுய்ந்திடநின்
றதிரமுழங்கி விழிந்து நெடுங்குளனுருடு கேணிதடா
மெண்டிசை யெங்குநிரம்பி யிருங்கரைபொ கி நெடும்புனல்பெய்
திம்பரு மும்பரு மெம்பரு நன்குசிறந்திட வின்பு தழீஇக்
கொண்டலுலாவிய தண்டலையோரக கொட்டுக சப்பாணி
குரவமணத்திடு மாவகிரிக்கிறை கொட்டுக சப்பாணி (சு)

மங்குறிரண்டு நெருங்கி யிருண்டுவளர்த்து நெரித்தகுழன்
மண்டமறைந்து வகிர்ந்து விளஞ்சசிவா ணுதல் வானின்முழுத்
திங்களொழுந்து விளங்கியவதனச் செந்துவர் வாய்த்தரளச்
சிறுமுறுவற்குமிழ் நாசிபணைப்பொரு செய்யதொடிப்பைந்தோட்
பங்கயவங்கை மடந்தையர் பண்ணைபரந்து புனற்படியும்
பைங்களபக் கலவைச்சேதகமொடு பாட்டாளியின் செங்காற்
குங்குமநாலு தடஞ்சுனையோரக கொட்டுக சப்பாணி
குரவமணத்திடு மாவகிரிக்கிறை கொட்டுக சப்பாணி. (எ)

நிவநிதியே மணியேயொளியேபழ நான்மறையின் பயனே
நக்கர்தமக்குப தேசமளித்தரு ளையகமே புரிவோர்
தவவடிவேயடி போற்றடியார்தம் வழித்துணையே கருந்தார்
தங்கண்மனங் கலராதகல் கின்றதனித்தமமமே சுடரே
பவநனிதீர் மறையோர்திருவீதி பரிந்துதொழும் புசெய்வோர்
பண்பமருந்திரு வாவணமங்கையர் பாடல்பயிற்றிடமேழ்
குவலயமும்பரவும்புக ழோரககொட்டுக சப்பாணி
குரவமணத்திடு மரவகிரிக்கிறை கொட்டுக சப்பாணி (அ)

மஞ்சரிமிஞ்சி மலைந்துமிலைந்து வளர்ந்துசுருண்ட குழன்
மங்கையர்கொங்கை மதர்த்ததயிர்த்து மருண்டல மந்தமுகைக்

கஞ்சமுடைந்து வழிந்தநறுந்தெளி கால்பெருகிப் புடைசூழ்
கன்னலலைத்தெழு கோதைவளம்பதி காவலசேவலவ
மஞ்சுவளர்ந்திட மீவளர்சேணின் வலாரியுதைத்தெழுவெண்
மத்தகயப்பிடி பெற்றுவளர்த்த வடுக்குவ டுத்தறுகட்
குஞ்சரி கும்பமுலைத் தைவருகர கொட்டுக சப்பாணி
குரவ மணத்திடு மாவகிரிக்கிறை கொட்டுக சப்பாணி (௯)

மேக்குறமாலை யெழுந்த குறும்பிறைமேய வெயிற்றிளிளமான்
மென்பிணைவண்டு மருண்டனபார்வை விழிக்குழிகண்ணகடுத்
தாக்குறு தோண்முலை யவுணமடந்தையர் தங்கள மங்கலநான்
றறிபடமாவுட லெறிபடவேல்விடு சமரசிகாமணிதேன்
வாக்குறிரும்ப நிரைத்து மலர்த்தொடர் மண்டமலைந்துமுது
மங்கையை பண்பிசிறீஇ யியல்பாடியுண் மாந்திமெய்வெறியயருங்
கோக்குற மங்கைகு யந்தழுவும்புய கொட்டுக சப்பாணி
குரவமணத்திடு மாவகிரிக்கிறை கொட்டுக சப்பாணி (௰)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

---

ஆகப்பருவம் ௪-க்குச்செய்யுள் ௪௮.

## ௫-வது
# முத்தப்பருவம்

வேறு

கிழங்குங்கனியும் விளைந்துதிர்ந்த கிளைநெல்லிடியும் பசுந்தேனுங்
கிளையினோடு மிருந்தயின்முன் கிடைத்தவதிதிக் கினியபலி
வழங்குங்குறவர் வதிசாரன் மன்னிப்பதினெண் கணத்தவரும்
வருநூல்வகையிற் கடவுளரும் வணங்கிப்பரவ வளர்கயிலைப்
பழங்குன் றகன் றுமலைமகட்கோர் பாகங்கொடுப்பப் பலவுயிரும்
படைப்போன் படைப்பவளிக்கும்விடைப்பாகனடந்துவதியமழை
முழங்குங்குடுமிச் செங்குன்றூர் முருகாமுத்தந் தருகவே
முருகுங் கமழும்பசுங்கடம்பார் மொய்ம்பா முத்தந் தருகவே (க)

சுழியுந்தியதண் புனற்றடத்துச் சுரும்பர்பறந்து பாண்மிழற்றிச்
சுழலுஞ் சிறைக்கான் முகையவிழ்ப்பத் துதையுங்கமலத்தலரினின்று
வழியும்பசுந்தேன் பெருக்கெடுத்து வரம்புகடந்து படுகரிடும்
மஞ்சட்பரந்து செஞ்சாலி வான்றியெடுத்து வரையருவி
யிழியுந்தெளி நீருடன்கலவு மெழிலேரகத்துக் கொருமுதலே
யிறைஞ்சுங் கலசக்குறுமுனிவற்கினிய வியற்சொற் றனிபுணர்ந்து
மொழியுங்கனிவாய் தமிழ்மணக்கு முருகாமுத்தந் தருகவே
முருகு கமழும்பசுங்கடம்பார் மொய்ம்பா முத்தந்தருகவே. (௨)

சகடுதுகள்பட்டிட வுதைத்த தண்டாமரைக்கட் டிருநெடுமா
ருனேபடைத்துக் காத்தளந்துண் டுமிழ்ந்துமறித்து மளித்தசை
யகடுகிழித்துச் சடைபழுத்த வமுழ்தி னினியகுடப்பலவி
னழிதேம்பழுத்த விதழூற லரிவைமகளிர் காடரடப்
பகடுபெருமத் தகமனேயபனேமென் முலேக்கட் கறுத்தநெனப்
பாற்கிண்கிணிவாய்ப் சுங்காய பைங்கோங் கரும்பின்பரியமு
முகடுபமரந் துயில்கோதை முதல்வாமுத்தம் தருகவே
முருகுகமழும் பசுங்கடம்பார் மொய்ம்பாமுத்தந் தருக

இளேக்குந் துடிநுண்மருங்கிறுமென் றிருதாண்மணிநூ புரமிரங்க
விறுமாந் தடிப்பாரித்துவளர்ந்தெழுந்த துணேப்பூண்முலே ட னுங்
வளேக்குங் குமிழ்க்கு மறிந்தெறியும் வரிக்கட்டுணேயார் பதம்பெயர்த்
மறுகுநடிக்கும் புயங்மலே வள்ளலிடப்பாகம் பகிர்ந்து
களேக்கும்பசிய தொடித்துணேத்தோட் கவுரி தளிர்க்கைவிரித்தழைப்பச்
கருணேமழை யாருயிர் தழைப்பக்கசிந்து விளேக்குஞ்சிறுமூரல்
முளேக்குஞ் சிறுவெண்பிறை கடுக்குமுகிழ்வாய் முத்தந்தருகவே
முருகுகமழும் பசுங்கடம்பார் மொய்ம்பாமுத்தந்தருகவே. (௪)

பனியுந்தியவெண் டயிர்நேயம் பருகப்பொதுவர் மகளிருளம்
பதறிப்பிடித்துச் சிறுதாம்பிற் பாரஅரைக்கறை யிற்பிணிப்பீர்த்துத்
தனியுந்தியவான் மருதொடித்துச் சகடொன்றுதைத்துப் புள்வாய்
தாளாற்கிழித்துப் பெரும்பூதத் தனமுண்பதுபோன் றுயிர்கவர்ந்து
களியுந்தியவான் கன்றெறிந்து காடக்கடவாரண மிறுத்துக்
கஞ்சனுயிரும வன்கிளேயுங்கடியுந் திருமாற்கொருமருகா
முனிபுங்கவர் போற்றிடுகோதை முருகா முத்தந்தருகவே
முருகுகமழும் பசுங்கடம்பார் மொய்பா முத்தந்தருகவே. (௫)

## வேறு.

சுருட்டுந் திரைப்பரவை போயாறுபடிகின்ற துறைமுகத்திப்பியீனுஞ்
சோதிமுத்தஞ் சங்குமிழ்ந்தமுத்தங் கமஞ் சூன்மழைசொரிந்தமுத்தம்
மருட்டும்படப்பையா ரவின்முத்தம்பூக மடல்விரிகளத்தின்முத்தம்
வளர்சாலியின்சிவைகழைக்கணுத்தாமரை மலர்ப்பொகுட்டுக்குரண்டம
தெருட்டுஞ்சுதைத்துளிதெளிக்குமுதுமதியினிற்றிகழ்முத்தமிவையனைத்
[துந்
சேரக்கடைந்தொப்பமிட்டுடைந்தொளிமழுங்கித்தேயுமவைவிரும்பேம்
அருட்டங்கு நின்பவளவிதழ்திறந்திளநகை யரும்பமணிமுத்தமருளே
...வச்தருமை யொருபாகர்சித்தமகி ழழகாநின்முத்தமருளே (சு)

...தடிப்பாரித்து வனமுலைச்சைலமகளும்
...ரட்டு மோட்டுப்பெரும்பாந்தள்வாலிளம்பிறைதுளு
...ண்ணணங்குமழ னெற்றிக்கணிறையுமகிழ்வா[ம்ப
...டைப் பொங்கியோங்கப்பரிவினின்மருங்குற்றிருந்து
...துதனை யீராறு தடவுப்புயம் பழிச்சித்
...ற்றம் விரித்துரைப்பச்சதம கன்விபுதர் முனிவரயன்
...வு மேலேரகத்துவள ராறுமுகமுத்தமருளே [மால்
...வா சலத்தருமையொருபாகர் சித்தமகி ழழகாநின்முத்தமருளே (எ)

தடக்குஞ்ச ரானனத்துனது தமயன்களி தளும்பநின்றினிதுவப்பத்
தமனியமணிப்பசுங்கொன்றைச்சடாடவித் தாதையொருபானகையுறக்
குடக்குங் குமக்கொங்கை வரைமடந்தையுமுளங் கூரன்புமுகமலர்த்தக்
கோகநக மமர்மாமி யும்பாமடந்தையுங் குறுமுறுவல்கொண் டிரந்துன்
றிடக்குன்ற மனையதோ ளாலவுணருயிருந் திரைக்கடலுமாவும்வரையுஞ்
சேரத்துளைத்தடுங் கூர்வேலெடுத்துத் திறம்பாதுநின்றுபகையை
யடக்கும்பெருந்திற லிசைத்துவேண்டினருன்ற னருமைவாய்முத்தமரு
யரவாசலத்தருமையொருபாகர்சித்தமகி ழழகாநின்முத்தமருளே[ளே
(அ)

கற்பகக்காவும் பொனுடுமம ராபதிக்கடிநகருமயிராணியாங்
காமக்கிழத்தியிணை விழைவும்விண்ணவர்மகளிர்கைகாட்டுபேரேவலும்
பொற்பகத்துயர் நலமுமரியணையுமகபதி பொருந்ிடக்கொடியவவுணர்
போகமும்பெருவரமுமுயிருங்கவர்ந்தவேற்புனிதசூன்மழைதழைசுபூல்
விற்பகப்பொரு நதற்குறமகட்கிறைவகடு விடவரவுமிழ்ந்தமணியும்
வெண்ணிறத் திப்பிகான்றொளிர் மணியுமிளநிலவு வெயிலுமோர்பதம்
[விரிப்ப

வற்பகற் றெரிவரியகோதைப்பெரும்பதிக் கரசேநின்முத்தமருளே
யரவாசலத்தருமை யொருபாகர்சித்தமகி ழழகாநின்முத்தமருளே (க)

வெண்டரு நறவப்பசுந்துளியலங்கலின் மதுத்துளிமுகந்துமலய
மாருதங் கமலத்தணங்குமுலை மூசுமேகாச வாசந்துவைக்குங்
கொண்டறுவுண்டமெய்த் தாமரைக்கண்ணனுங் குறுநகைவிளைத்துநின்
குறையிரந்தனனன்றி யடியமும்பிறவிக் கொடும்பவப்பிறவியேறக்[கு]
கண்டருவருள்பொழி கடைக்கணோக்குதவிக் கசிந்தொழுகுமமுதவூறற்
கவுரி திருமடி நனைப்பத்துவர் பழுத்தனைய கனிவாய்திறந்திதழ்
தண்டர்மாதவர் பரவுமேலேரகப்பதிக் கரசேநின்முத்தமருளே [விரித்
யரவாசலத்தருமை யொருபாகர்சித்தமகி ழழகாநின்முத்தமருளே(௨)

முத்தப்பருவ முற்றிற்று.

---

ஆகப்பருவம் ௫-க்குச் செய்யுள் ௫௬.

௬-வது

# வாரானைப் பருவம்.

## வேறு.

மழகுன்றனைய பணைப்புயமு மணிப்பூண்டயங்குந் திருமார்பும், வனசமலர்ப்பேரழுமுகமும் வயங்குங்கருணைப்புன்னகையும், அழகுங்கடவுட் சிறுபிடியு மசலக்குறவர் மடமகளு, மப்போதப்போதுளங் களிப்புற்றகத்திற்புளக மயிர்பொடிப்பப், பழகுஞ்சிறுபுன்மதித்தாயர் பனிநீராட்டிப் பழுத்தநறும் பசியபொடி மெய்திமிர்ந்துபல பணியுந்திருத்தற் கழைத்தனரேல், மழவின்விளையாட் டியைந்திருத்தல் மனபோவரசேவருகவே, மடவார்நடமாடுங்கோதை வள்ளல்வருக வருகவே. (க)

தண்ணங் கதம்பப் பசுந்தொடையல் தளிர்க்குஞ் சிறுகுஞ்சியைமுடிந்து, சாத்தவருக நுதற்சுடிகை தரிக்கவருகப்பணிக்குதம்பைப், பண்ணுண் டிருபாப்புறுங் குழையிற்பரிக்கவருக மதாணிபுரம், பரப்பவருக மணிக்கடகம் பாணிவனைய வருகவிடைக், கண்ணின்றொளிர் கிண்கிணியரைஞாண் கவினவணிய வருகபதங், கழலுஞ்சிலப்புஞ் சதங்கையுநேர் கலிப்பவணிய வருகவெழில்,

வண்ணம் படுகண்மேனறகல மைக்காப்பணியவருகவே, மடவார் நடமாடிடுங்கோதை வள்ளல் வருகவருகவே. (உ)

முழங்குங்கமஞ் சூன்மழைமுழவ முழக்கவெழுஞ் சாதகங் கவுத்த, முன்னன்றிபம்பப் பசுங்கதலி முடங்காதவிழ்ந்தபாசடை யிற், றழங்குஞ் சிறுகாலசைத்தெழினி தயக்கப்பொறி வண்டிசை மிழற்றத், தடந்தாமரையின்மடப்பெடையைத்தழீஇய சிறையோதி மமிருந்து, செழுங்கஞ்பரப்பத் தோகைமயிற் சிறைமீ விரித்து நடம்பயிலச், சிந்தைகளித்து முகமலர்ந்து திரட்டாட்கொன்றைக் கனகமெதிர், வழங்கும் பணப்பாந்தளஞ்சிசரி வாழ்வேவருக வரு கவே, மடவார்நடமாடிடு கோதை வள்ளல்வருக வருகவே. (ங)

குடக்குன் றிடித்துலிங்கிழித்துக் குறுங்காற்சவரிநெட்டோ ருத்தற், குழவிக்கலபம்பிடித் துடரக்குலையப்பாட்டிக் கரையுடைந் து, முடக்குங் குடக்காய்பலவொடித்து மூரிப்பசுங்காய்த் தாழை வன, முழுதுமலைத்துக்கழைப்படப்பை முதலைக்களைந்துவயற்சாலி திடர்க்கட் படுத்துக் கடைசியர்க டிடுக்குற்றோடப் பெருக்கெடுத் துச், செழித்துநடத்தும் பொனித்துறைவ திரண்டுகவின்சொண் டொளிர்தரள, வடக்குங்குமப்பூண் முலைக்கவுரி மகவே வருக வருகவே, மடவார்நடமாடிடு கோதைவள்ளல் வருக வருகவே (ச)

கருதுங் களிற்றினெதிர்நடந்து கராவையடைந்து வெருவ கற்றிக், கடைக்கட்கருணை கரிக்குதவி கமலத்திறைதேர்ந் தறிவரி தாப்ப், புரியுந்தவத்தினுறுபயனும் பொருவில்பெருவீ டினிதளித் துப், புலம்புந்தெரிவைக்கவைநாப்பட்புனைபைந்தகின்பாருதுதவிப், பெருவஞ் சகத்தாடகையுடலம் பிளந்துசிலையாய் வழிக்கிடந்த, பேதையருஞ் சாபமுமகற்றிப் பெருமாதவன்பின் மிதிலைநகர், மருவியிருஞ் சாபமுமிறுத்தோன் மருகன்வருக வருகவே, மட மான் குழலிதழீஇயபுய மழவன் வருக வருகவே. (ரு)

வேறு.

முருகு கமழ்தரு கரியசுரிகுழன் முகிழ்மென்முலையிளவனி தையர், முறுவல்கொடு திருவிழவின் மருகிடைமுறைய கனிமயி னடமெனப், பருமமணிதுகில் விரிபநிழலிடு படியின்முறைமுறை

நடமிடப், பதுமபதயுக பரிபுரமுமெதிர் பதறியிடைவறிதெனவெ
னத், தருவினனுமல ரிணைபிணையலணி தரவளகமிசைதுயில்வரத்,
தளையமடநடை புரிவிணரிவையர் தமதுநடைசில பயில்வபோற்,
குருகுநடைபெய ராவகிரிமிசை குலவுகருணையன் வருகவே, குற
வர் மடமக ளிதணி னிழலிடு குமரகுருபரன் வருகவே. (௬)

தளவநகையில விதழினிலகிதழ் தமரவிசைமுரல் பமரமார்,
தகரமொழுகிய சுரியல்சுரியமெய் தளருமுடையொரு கரமிசை,
யளவமொருதலை செருகியுருபணியணிய வமைதியு மிலையென,
வகல்பொன்மலையென நிலவுமுயர்நிலை யணுகிநிரைகொடு தெரிவை
மார், களவுகொடுகுற மகளை யிவனெனல் கவருமொருகள்வனென
வொருக், கனியரிர்தர முனியமதகரி கடவிமறுகிடை நடவிடுங்,
குளவ குகவறு முகவ பணிகிரி குலவுகருணையன் வருகவே, குற
வர் மடமக ளிதணினிழலிடு குமரகுருபரன் வருகவே. (௭)

அரவமறிகடலகடுகிழிபடவமரினெதிரதி ரிகல்செய்மா, வவு
ணனுடலுயிர் நிவருநெடுவரை யகலமொருவழிபகநெறி, விரவவயி
லொடு கரபனிருபுய விமலவடியவர் தமதுள, வினைக டுருவுமோ
ரரவமரகதவிமலை குமரபதுமமலர், மருவுமரசிள வனமுமுறு
பெடை யனமுமகிழ்கொடு கலவிட, மகளிர்குமரர் கணுறனுமகு
துனிமயிர்புளக முறுகளிவரக், குரவமலர்நறைகமழு மவகிரிகுலவு
மிளையவன் வருகவே, குறவர்மடமக ளிதணி னிழலிடுகுமரகுரு
பரன் வருகவே. (௮)

தவளவிளநில வுமிழுமுழுமதி தவழுமிரசதகிரிமிசைத், தப
னனுமுழ வெயிலினொளி கெழுதனுவினெடுவிடை கடவுமோர்,
பவளவரையிடை படருமொரு சிறுபசியகொடியென நுணுகிடைப்,
பரைவிமலைசிவை கவுரிபயிரவி பகவ திகுமரியானுடல், கவருமு
மையொரு புடையினெழிலுறு கலசமுலைவழியமுதுநீ, கருணை
மொழிகுறு முறுவல்கொடுநனை கவினுமதிமுக மலர்வதோர்,
குவளையெனவளர் பனிருநயனமெய் குளிர்ப ணிமலைமன்வருகவே,
குறவர் மடமகளிதணி னிழலிடு குமரகுருபரன் வருகவே. (௯)

அமுதகலைமதி தவழுவரைமுக டனையவமுதகலச மெலா,
பகடு புழைபடவழிவெளருவியி னரமகளிர்புனல் குடைதொறுங்

கமலமொருபுடை செவலியொருபுடை கரியகுவளையுமொருபுடை, கவினவலர்மெய்த்திகிரியனையபுள கமலமறிதிரைமிசையெழ, விமித முடனுட றிமிருமரிசன மிசையகலவையி னறையெலாம், விரை வினதியுறு கயல்களெதிர்கொடு விமலநதிதலையுகடாகக், குமுதசக னறை கமழரவகிரி குலவுமிளையவன் வருகவே, குறவர்மடமக ளிதனி னிழலிடுகுமரகுருபரன் வருகவே. (க0)

வாரானைப்பருவ முற்று.

---

ஆகச்செயுள் சுஅ.

எ-வது

# அம்புலிப்பருவம்.

மாகமுகடணவும் வரைச்சாரன் மேயும்வெடிவாற்றலைக்கன்று தவுமோர், வளைகருங்கோடுடைச் செங்கட் கருங்கவரி மழவிளங் கன்றையுள்ளி, நாகநிழனின்றுபடிகப்பாறையிற் பொழிநறும்பால் பெருக்கெடுத்து, நலியும்புலிப்பற ழருந்தமுழைபுக்கிழிய நானிலத் தருவி பெருகிச், சீகரமெதிர்த்தெறி தரங்கம்பெரும்புனற் றெரு விதிபரவமுதநின், தெள்ளமுத கலசங்குறைந்திடினு மிதுகொண் டுதினநிரப்புற்றுநின்ற, ஞகமதுதளராமலொருதன்மையாகலா,மம் புலீயாடவாவே, ஆடிமறைபாடியருணீடுசெங் கோடனுட னம்புலீ யாடவாவே (க)

சோதிடமு நான்முறையுணர்ந்து கரைகண்டமேற் றொல் பிறப்பந்தணாளர், சொற்படி வழாதுபூரணைநாளி னின்னைத்தொடர்ந் தெழுபெரும்பாந்தளால், வாதனையுருதவகை மயிலுண்டு தானவர் மறுத்துந்தொடர்ந்திடாமல்வைநுதிச்செவ்வே லிவன்காத்துண்டுநீ மாகத்துழன்றுசிந்தை, பேதமையுருமலிவன் மீதுரைத்திடுகின்ற பிள்ளைத்தமிழ்ப்பனுவலின், பெய்முதுக்குறைவுண்டு கவிராசரா சன், பெரும்புராணச்செய்யுளுண், டாதரவினேடுதேர்ந் தின்புற்று வாழலா மம்புலியாடவாவே, யாடிமறைபாடியரு ணீடுசெங்கோட னுடனம்புலீயாடவாவே. (உ)

**வண்டு**மொர்ண் டுண்டுபண் கண்டுசிறை விரிதோரு மடலவிழ்த் தாவிந்தநாண், மலர்விரிந் திழிபசுந்தேறல் கால்பெருகியவ்வாவியிற்றேங்கவாளை, யுண்டுடல்க ளித்துவெறி கொண்டுநின் றுகளமீ தோடிமீண்டடர்தாழைவா, யுதிர்காயுதிர்ப்பக் குடப்பலாவின்கனி யுதிர்த்துப் பசுங்கதலியின், கொண்டைபைந்தாறாழ்ந்திடைப்பழ முதிர்த்தயல் குளப்பெருந்தாங்கல்புக்குக் குடைந்துபைம்புட்குல மெழுப்பிவிளையாடிவளர் குளிர்புனற்சொரிகோதைவாழ், அண்டர் மண்டெண்டிசையர் மண்டலந்தொழு மிவனோ டம்புலீயாடவாவே, ஆடிமறைபாடியரு ணீடுசெங்கோட னுடனம்புலியாடவாவே. (௩)

பூருகோடு பொற்று தூகுங்குறுந் தாட்புன்னை முத்தம்பரப்பியும்பர், மூசுந்துணர்ப்பந்த ரிற்பாட்டளிக்குல முழக்கமழைமுழவமார்ப்பக், குருகோடென்றெழு மகன்றில்காளங்கொளக் கோட்டிளைய கோட்டுமேதி, குளிர்நிழல்வதிந்துகண்களிகொண்டுநோக்கக்குழக்கன்று துள்ளியாட, வெருகோடிளங் கருப்பைப்பறழ் பணிப்புறு விளையாடவேங்கையுறையுள், வெரூஉஞ் சிறுபுல்வாய்துயில வடுபகைதணிந்தபணி வெற்பிறைவநின்னையன்பின், அருகோடிருந்துவிளை யாடற்குவேண்டின னம்புலியாடவாவே, ஆடிமறைபாடியரு ணீடுசெங்கோடனுட னம்புலியாடவாவே. (௪)

ஓகைகொண் டிரவுவந்தடைவைநீ யிவனிரவையோடத்து ரந்துகாப்ப, னுலகெங்கு மவிரொளிவிளைப்பைநீநின்மனத்தோங் கொளியளிப்பனிவனே, சாகையுறுநானுகலைக்குரியைநீ யிவன்சகலகலையுந் தெரிந்தோன், ருளான் மழுக்குண்டதொருமுக முனக்கது தளிர்க்க வளராறுமுகவன், மாகமுயரமருக்குபகாரிநீ புவனமன்னுயிர்க்குபகாரிகாண், வாளெயிற்றரவினுக் கஞ்சுறுவைநீ யந்தமாசுண வரைக்கிறையவ, னுகையாலிவனருகிருந்து தனிவாழலா மம்புலியாடவாவே, யாடிமறைபாடியருணீடுசெங்கோடனுட னம்புலியாடவாவே. (௫)

## வேறு.

பூருகளைந்திடு சுரிகுழன்மங்கையர் முகமிணை யுறநாணி முயலுறுஞ்சிறு மறுவதடைந்தனை முதுபெரும்பணப்பாந்த, ளரியநின்றனையெளிதெடுத்துண்ணவு மஞ்சிமெய்குறைகின்று, யதுவு மன்றிநின்முகமழுக்குண்டது மவனியாரறியாரே, பெருமிதந்தருபொருளுணரிவனைநீ பிள்ளைமைகருதாது, பிரியமுற்றதே யமையுமென்றுள்ளினிற் பிரிகலா

தென்றூன்ற, மருகிருந்து நின்குறைமுழுதுந்தளு ழம்புலிவருவாயே,
யபிலவன்பணிச் சயிலநின்றழைத்தன னம்புலிவருவாயே. (சு)

விண்டராதல மடங்கலுமிவன்பதி வெற்பெலாமணிமாட, மேரு
மால்வரை மேனிலந் திகிரிமாவிண்டுசுற்றிடு நாஞ்சிற், பண்டைநான்
மறைப்பொருளெலா மிவன்புகழ் பண்ணவர்முதலேனோர், பழந்தொழும்
பினர் வர்னநாட்டிமையவர் பரிசனப்பரியாளர், துண்டநாண்மதிசூடி
மாலயனிவன் சொற்படியமைச்சேகாண், சோதிவானவனிவனலான்மற்
றதுசொற்றிடற்கமையாதால், அண்டர்நாயகனுடனிருந்தாடுதற் கம்புலி
வருவாயே, அயிலவன்பணிச்சயிலனின்றழைத்தனனம்புலிவருவாயே(எ)

கருணையுங்களவுங் கொலையும்பொயுங் கட்கடைக் குடிகொண்
ட, கவிதழ்த்துவர் வாய்ச்சிறுபுன்னகைக் கலசமென்முலை மாதர்,
சுருணறுங்குழற் கோதிடானநெய் துதைமலர்ப்பதந்தோய,
துடிநுசுப்பிடை நுடங்கநுபுரத்தொடு சோருமேகலை யேங்கத்
தெருநடந்து நீர்த்துறைப்படி குங்குமச்சேதகமணநாறுஞ், செழுந்
தடங்கரைப் பொய்கைசூழ் கோதையந் திருப்பெரும்பதியாளன்,
அருணயந்துளைக் கடைக்கணுற்றனனித மம்புலிவருவாயே, அயில
வன்பணிச் சயிலனின்றழைத்தன னம்புலிவருவாயே. (அ)

வெண்டருமலகரிமிழற்றம்புய மலரவிழ்ந்தெழில்கூரும், வா
வியுஞ்செழுஞ்சாலியின் பழனமும்வளர் கருப்பங்காடுங், சொண்ட
ருவுடைஞ்சந்தனச் சோலையுங்தூம்பொதுக்கிய கால்வாய்க், கூல
முங் குளனுங்கமஞ்சூழ்குடக் கூன்வளைதவழ்ந்தேறி, மண்டுசூன்
முதிர்ந்தீன்றநீண்மணி நிலாவழுங்கவெண்பணிகான்ற, மணிக்குழா
மிளவெயில்விடா வளர்கொடி மாடச்செங்குன்றூர்வாழ், அண்டர்
நாயகனுடனிருந்தாடுதற் கம்புலிவருவாயே, யபிலவன்பணிச்சயில
னின்றழைத்தன னம்புலிவருவாயே. (கூ)

கார்விடுத்திகல் புரிவயிரப்படைக் காவலன் முனிவோர்கள்
கடவுளோர்முத லாகவன்னோர்வதிகடிநகர்சிறைமூடப், போர்விடுத்
தெழுபுவன முமாசுமுற் புரிதயித்தியனுவி, பொருதடக்கைவேல்
கொண்டு கொண்டவ னிவன் புனித வேள் புவிமீதில் :

கார்விடப் பணிமிலைக்குங் கனிவாணை முற்றுனை வாவென்று
ஞற்றிடாவெனிலப் பணிவந்துநின் னுடன்முழுதுண்டாலு
மார்விலக்குதற்கரிபரென் றுணர்திலையம்புலி வருவாயே
யயிலவன்பணிச் சயிலனின்றழைத்தன னம்புலீ வருவாயே

அம்புலிப்பருவம் முற்றிற்று.

---

ஆகச்செய்யுள் எஅ.

அ-வது

# சிற்றிற்பருவம்.

வேறு.

சுழித்துத் தரங்கத் திரைதரைக்கத் தெண்ணீர்ப் பெருக்கிற் பசந்தரிக்குஞ்
சுடர்கால் மணிப்பரைச் சூட்டுகிந்துத் துணுக்குற் றிளவெண் பிறை [யொதுங்க
விழிக்குங் குளத்தீக் கொழுந்தென்மேல் விரிக்குஞ் சுடர்ச்செஞ் சடைப்
மெப்போர் பதுதிகரந் துறையும் விமலையலர்க்கட் டுணைகளிப்ப [பெருமான்
வழிக்கொண் டரைக்கிண் கிணியார்ப்ப மணியாப் புறுவஞ் சிறிதரும்ப
மகிழ்வி னடர்தங் குடனுறைந்து மணற்சோ றயிறல் கடனன்றாற்
செழிக்குந் தமிழ்க்கோ தைப்பதிவாழ் தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ் சேர்ப்பா சிற்றில் சிதையேலே (க)

தறுகட் சிறுகட் புகர்முகத்துத் தடவெண் மருப்புப் பிணக்கைசெழுஞ்
சயிலங் கரைக்கு மதக்கலுழித் தாரை பெருக்கற் றிழிபருவி
மறுகிற் குறுகிப் பெருகிபமம் வழக்குற் றிளைஞரிழுந்துறநாண்
மலர்ப்பூங் குழலார் சிலைக்காமன் வசந்தத் திருப்பேர் விழவினெனத்
திறுதற் றிறைக்கும் பசுங்களபத் தெழில்கூர் நறுஞ்சாந் தனப்பொடியா
லிருந்தேசனமுற் றாசத்திண்டே வெதிரோட் டேறணைக் துகட்டிலுகால்

செறுகுற் றௌிர்சூ ழிசைக்கோதைத் தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ் சேர்ப்பா சிற்றில் சிதையேலே (௪)

தூக்கின் றொகுதி யரங்குதொறுஞ் சொல்லு மிசையுஞ் சுதியுமிடை
தொகுத்தும் வகுத்தும் விரித்துமலர்த் தோட்டுக் கமல வீட்டுவதி
தாக்கும் வியக்கும் வனமுலையார் தத்தங் குழவி முத்தமிழுந்
தாவா விருந்து பாராட்டத் தழைக்கும் புகட்கங் குரியாக
வாக்கு மணைட் டிலிற்பதத்தி னெடுத்து வடித்த வெயவாகு
வருவிப் பெருக்கி னுவட்டிபெடுத் தமலை விளைத்துக் கமலையுடன்
றேக்கும் பழனத் திகழ்கோதைத் தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ் சேர்ப்பா சிற்றில் சிதையேலே (௫)

சழிக்கண் டலில்வண் டலின்மறுகிற் கரையிற் றுறையிற் றுறையினடுங்
கழையிற் றழையுஞ் சொலின்டலிற் கரிற் குமரிச் செறுந்தூற்றிற்
சுழிக்கும் புனலுற் றிடுங்குழியிற் சுழியிற் கமலக் கமலநெடுஞ்
சுனையிற் சமருஞ்சுல் வயறுளைந்த குறிக்குங் குடக்கூன் முடப்பணிலங்
கொழிக்குந் தாளம் பழுத்தபைந்தாட் கொழுஞ்சா லியின்செங் குரலரியுங்
கொற்றுக் களப்ப மதுவடித்துக் குடிக்கு நறவுக் கெதிரளந்து
செழிக்குந் தமிழ்க்கோதைப் பதிவாழ் தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ் சேர்ப்பா சிற்றில் சிதையேலே (௬)

அறுகா லளியாண் மிழற்றமுகை யவிழ்ந்த பசுந்தா துகுந் தெரிய
லசைந்து பசந்த கருங்கூந்த லமுத மனையார் முலை பெரிது
மறுகால் வருத்தற் கிடையிடையோர் மாற்றங் கிடையா தெனவணிபு
மணிமே கலையு நூபுரமும் வாய்விட் டிரங்க் நடை பெயர
வுறுகா முகர்கண் டுளமயங்கி யொருபா னெருங்கித் தொடர்ந்துசெல
வுறுதி முரசங் கலிப்பமத னுறுத்துச் சமர்க் கென் றெழுந்தூர்ந்த
சிறுகால் வழங்குந் தமிழ்க்கோதைத் தேவே சிற்றில் சிதையேலே
தெய்வப் பிடிக்குங் குறமகட்குஞ் சேர்ப்பா சிற்றில் சிதையேலே (௭)

வேறு

தனதன தனத்த தனதன தனத்த தனதன தனத்த தனதான

அநமறைபதத்த முதுமக னுரைத்த வரிபசொலி னுற்ற பொருள்பரீ
அறைவிக [illegible]

விரிபுவிபடைத்த லொழிபவகின்முத்தொழி லறவனைத்து முளமாழ்கி
விடைகட வொருத்தனி டமுறையிடத்தன் விரகினொடுமுற்றி வராதே
திரைபெண நவிற்ற வவன்வரலுணர்த்த வுளமகிழ்தொடப்பொருளைபோதென்
றுரைபணிதாக்க மழவிடையுயர்த்த வொருமுதல்வணக்க மொடுதாழக்
குருவடிவமைற்ற மலைவனிகைபெற்ற குமரனெமர்சிற்றில் சிதையேலே
குறமுனி துதிக்க முதுதமிழ்விரித்த குழகனெமர் சிற்றில் சிதையேலே (௬

அலர்திரைபரட்டு மறிகடலுடுத்த வகிலர்கனைத்த நாகேச
ரவணிவனெனற்சொற் றிடனறநெருக்கி யடியிணைபழிச்சி முடிதாழ
வலைபொருகரத்து வாள்கிளர்சிரித்து மலைதகிரடர்த்து மறுகூடே
வருபிளைஞரைக்க றுவிபெகிர்சினத்து மதர்கொடுசிவத்து முறைமாறிக்
கலசமிடிமைக்க ணரிவைபர்களித்த கலபமயிலெல்லாப்ப நடமாட
கதிர்மணிகொழித்த நதிபுகிர்செலுற்ற கயல்களெகளிக்க முகில்மீறுங்
குலமழைவழக்கு மரவமலைபற்ற குமரனெமர்சிற்றில் சிதையேலே
குறமுனிதுதிக்க முதுதமிழ்விரித்த குழகனெமர்சிற்றில் சிதையேலே (௭)

பொருதிரைதிரட்டு கழைமணிமதர்த்த புகர்முகமருப்பி னுதமாரம்
பொறியரவுநுக்கு கதிர்மணிபரப்ப புதுவயிரமொப்பின் மணிநீல
முருவமணரித்த பொனினறல்கொழிக்கு மொளிகெழுபொனித்து றைமி
யுருவசியையொத்த வரிவையர்குளித்த வுபர்கலவைமிக்க மணநாற [றூடே
லருகிருகரைக்கண் மகிழ்சூரபுனைத்தொகுதிமருதணித்தண் மலர்மீதே
யறுபதமிரைத்து மலரரிதெரிப்ப வடரிருபெப்ப வகல்சோதிக்
குருமணிவிளக்க முறபணிகிரிக்கு மாரனெமதுசிற்றில் சிதையேலே
குறமுனிதுதிக்க முதுதமிழ்விரித்த குழகனெமர்சிற்றில் சிதையேலே (௮

வேறு

தனதன தனத்த தனதன தனத்த தனதான.

அரிவதனமுற்ற வவுணனவனுக்கி ளையசூர
னடருளமுசத்த மலைதிரள்புயத்த சுரரோடு
முரியகிளைமுற்று மொருநொடியிலுற்றொ ருதைமாள
வொளிவிறுதயித்தி யனுமுவரிவெற்பு முதுமாவு
மரிதாவிடுக்கு மொளிரிலையசத்தி தாகின்
னடியிணைவழுத்து மலர்பவமகற்றல் நெறியாமே

பரிவினொடியற்றி வதியுமெமர்சிற்றில் சிதையேலே
பணிகிரிவிளக்கு முருகனெமர்சிற்றில் சிதையேலே (௯)

மதுமலருகுக்கும் வகுளநிழலிற்றண் மணல்கோலி
வளைசுமனையினட்டி யிடுகுழிசியிற்பெய் யுலைநீர்தே
புதுநறவினிற்ற ளவல்சிபு கட்டி யடுசோறு
புதுவரவினுற்ற நுதமலோடிருத்தி யயிலாமே
மதுமெனவழிப்ப வவுணரசியற்று பதியோமுன்
கடவுளரசுற்ற கடிமனையெனக்க ருதியோநின்
பதமலர்சிவப்பு மிழவெமதுசிற்றில் சிதையேலே
பணிகிரிவிளக்கு குகனெமதுசிற்றில் சிதையேலே

சிற்றிற் பருவ முற்றிற்று. (௰)

---

ஆகச் செய்புள் அஅ.

௯ வது

# சிறுபறைப்பருவம்.

வேறு

ஆரணமனைத்துமுந்தின் றுனதிசைமுழக்கமல ரம்புயன் றுதிமுழக்க
வண்டராகண்டல னெதிர்ந்தடிபணித்துபே ராவலமுழக்கநேமி
காரணன்பாற்கடன் மதித்தவமு தொடும்வந்த னளினமினெடும்பிறந்த
கனிதீர்வ லம்புரி முழக்கவி ணரம்பையர் நடித்துநின் றிசைமுழக்க
வாரண முகத்தனது தமையன் களிப்போடு மதத்தொனி முழக்கநாளு
மண்மடந் தையர்பாட லொலி முழக்கவளர் மறுகெங்க ணும்வளங்கூர்
சீரணவு செந்தமிழ்க் கோதைப் பதிக்கிறைவ சிறுபறை முழக்கியருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு சிறுபறை முழக்கியருளே (க)

வாரிச மடந்தைமண முண்டமண மார்பத்து மாதவக் கடவுளொருநான்
மல்லற் புயத்தவுணன் மேதினி சுருட்டிமா பாதலம்புக்கஞான

பாரியவ ராகவவ தாரமாய் மண்கீன்று பருமருப் பினிலெடுத்த
பார்மக ளுடுத்தபாய் திரைநெடுங் கார்க்கடல் படிந்துவர் கடிந்து போக்கி
வாரமு தயின்றருளுன் ருதிரமெய் கறுத்தேறி வானெழுந் தகடுவீங்கி
வலவருத் துற்றந் தாத்துலைந் தகல்பாழி வாய்திறந் தண்டமண்டி
சேரவெழு கார்முழக் கிடுபணி கிரிக்கிறைவ சிறுபறை முழக்கியருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு சிறுபறை முழக்கியருளே (௨)

போதுற்ற கற்பகச் செழுநறுந் தொடரும் புவிப்பது மலர்த்தாமமும்
பொலிவுற வுதிர்த்தவிதழ் பொன்வினைஞர் கைபுனைப் புனையிழை மணிக்கு
சாதற்படித்திரு படர்ந்தைய ரணிந்தசிறு கலனும்ப ளிர்குழைத்த [ழாமுங்
கலவைப் பசுஞ்சேத கப்பொடிகை புனைகலாக் கடவுட் கொழுஞ்சுண்ணமும்
மாதர்ப் பிடிக்குலமு மாமகளி ருஞ்சமர் மலைந்தவுண் செற்றசெவ்வேல்
வாழிபா டித்தமிழ் முழக்கிடுங் குரவையின் மறுகெங்க ணுந்துவைபடச்
சிதப் புனற்றிரை முழக்குசெங் கோட்டிறைவ சிறுபறை முழக்கியருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு சிறுபறை முழக்கியருளே (௩)

கன்னற் கழித்துங் கரும்பாலமிட்டுங் கனிந்த சாறட்டு வட்டுக்
கண்டும் பழுக்காய் கழித்துரித்தும் பசுங் கதலிபங் குலைதடிந்துந்
துன்னுற்ற முட்குடப் பலவின்பழங்கிழித் துஞ்சுளைய ளைந்தெடுத்துந்
துணைக்கவைக் காற்கரும் பகடலம் பூட்டியேர்த் தொழுதழுது மஞ்சடொட்
பன்னற் கிழங்கிஞ்சி நீரிறைத்துஞ்செழும் பழனத்து நடவு நட்டும் [டும்
பல்வினைக் கைவினை முடித்துடன் முழக்கிடப் பருமுத்த மெதிரளந்து
செந்நெற் கதிர்ப்போ ரிடுங்கோதை வளர்குமர சிறுபறைமு ழக்கியருளே
திரிபதகை தருமுருக வரிமருகபரிவினொடு சிறுபறை முழக்கியருளே (௪)

எழுதாத முதுநூலு மாகமப்பகுதியு டனிதிகாச மங்கமாறு
மினியமுத் தமிழின் பெருங்காப்பி யத்தொடியாப் பிலக்கணப் பகுதிகீதத்
தொழிலே ழிசைத்திறந் துத்தமொடு தாரந் துலங்குகைக் கிளையந்தாரந்
தொடர்மத்தி மந்தார கத்துயர் விகற்பமுஞ் சுதிகொளு டகவகுப்பிற்
சொழுவாறு நிலையுநற் றொழிலாறு சாருங்குறிக்கு மூவகையங்கமுங்
கூறுமகமார்க்கமும் புறமார்க்க விதமுங்குறிக் கொண்டுணர்ந்தனுதினஞ்
செழுமாட யாளிகைமு ழக்குகோ தைக்கிறைவ சிறுபறைமு ழக்கியருளே
திரிபதகை தருமுருக வரிமருக பரிவினொடு சிறுபறை முழக்கியருளே(௫)

## வேறு.

தாரப் புரிதழன் மங்கையர் கொங்கை தாக்கினை ஒவ்வாமற்
சலிலக் கிடைமுழு பங்கமடைந்து கடப்பாரை நீணி
ரகடிக்கிழிப வளஞ்செழு ஞாளயரும்பிய டிப்பாரித்
தம்பிரை முகைபுளம் வெம்பிபு பிப்பவலர்க்கமலப்போதிற்
பகர்தற் கரியசு வைத்தெளிபண்டு பசந்துளிப்போறிப்
பரியவ ராலுக ளும்பொய்கை மேவு பழப்பதி போகம்வாழ்
குகாட் செவிமலே புனைமேற் றமகலே கொட்டுக சிறுபறையே
குக்குட துவசம யிற்பரி புனைபவ கொட்டுக சிறுபறையே (௬)

சங்குறிரண்டுரு வங்கொடெழுந்த கடுத்தகல்வானேறிச்
சால்கொடு கார்மழை பெய்த கடும் புனல்காடு பறப்புகொளாத்
தேர்முநிம்பி யெடுத்த பெருக்கி னிருங்குட கிற்றலைசாய்த்
திருநில முந்திய பொன்னி நடந்த வெழிற்பூந் துறைநாடா
திங்கள் வகிர்ந்து சவுட்சண் மடுத்த மருப்பிவர் வெண்கரியின்
தெய்வப் பிடியுத வுஞ்சிறு மங்கை திரண்டமுலைக் கலபக்
குங்கும பங்கமளைந்தக டம்புப கொட்டுக சிறுபறையே
குக்குட துவசம யிற்பரி புனைபவ கொட்டுக சிறுபறையே (௭)

மன்றலளைந்து தடம்பணை நீரொடு வாவியினீராவி
மாளவ ருக்கையி லாங்கவி பூகவனத்தி னிழற்றடவிப்
புன்றலைவந்து விரிந்த சொழுந்தளிருப்பூவும் வருடிப்
பூசன்மதன்சமர் வேளையுணர்ந்து புதர்ந்தொடை கிரசிக்கிக்
தென்றலிளாஞ்சிறு காண்மறு கூடு செழும்பி வருங்கோதைத்
திருநகராள வருந்தவர் சிந்தை தெரிந்துறைபேராள
குன்றமெறிந்து தடிந்த செவ்வேலவ கொட்டுக சிறுபறையே
குக்குட துவசம யிற்பரிபுனைபவ கொட்டுக சிறுபறையே (௮)

கண்டனறுந்தளி ருச்சிவெடித்தசு கந்தசெங்கம்போதிற்
கடிகொள்ப ராகமும் வளைசாபுன்னைக் கமழ்நாதுந்தெழுமி
முண்டக நாண்மல ருந்தண் டேறலின் மொய்த்தக லேனவிடு
முன்புற வுண்டு சுரும்ப ரெழுந்து முழங்கிய பாலைவியிற்
தெண்டிரை யுந்திப வோதைமு ழாவொலி செய்ப மயிற்பெடையும்
சேவலிளந்தோ கைக்குலமாடச் சினைமுதிர் சரியகிறக்

கொண்டலுறங்கிய தண்டலையோரக் கொட்டுக சிறுபறையே.
குக்குடதுவசம யிற்பரியுகைபவ கொட்டுக சிறுபறையே (௯)

மாசமலர்ந்து வளர்ந்தெழு பொங்கைத மகர்றிலிரந்தாத
மாலைழயிளஞ்சினை யூடுகருங்குயின் மன்னிசையின் கூவப்
டாசுமைமென்சொன் மடந்தையர் பொய்தல் படர்ந்து தொடர்ந்துவரப்
பாவைமுழங்க மதன்சமர்மேல்கொடு பையவருஞ் சிறுசா
லோகையோ டேர்ந்தக லாவணமன்றி னுலாவரல் கண்டு மகிழ்ந்
தோடைதடம்பொய்கை வாவியுமகமுக முற்றுமலர்ந்தெனக்
கோகனகம்பொலி கோதையர்நாயக கொட்டுக சிறுபறையே.
குக்குட துவசம யிற்பரியுகைபவ கொட்டுக சிறுபறையே

சிறுபறைப்படலம் முற்றிற்று.

---

ஆகச் செய்யுள் ௯௰.

௰-வது

# சிறுதேர்ப்பருவம்.

வண்டோ விடுந்தண் டலைப்புது மலர்த்தொகுதி மதுநீர் தெளிப்பவாடை
வந்துகாட் டுக்களைய பணிவாயி ரோரணமு மல்குகே தனமுநாட்டிப்
பண்டோ ரளிக்குல முழக்குபூ சக்கொழும் பாளையு மலர்த்தாமமும்
பாங்கினொடு தூளையு றத்தூங்கநாற் றிச்செம் பழுக்காய்க்கு டிப்புதூக்கித்
தண்டே ராப்பைப் பழுக்குலைநீடிப்பசுந் தமனியத் தகடுழுத்தித்
தழைப சும்பட்டி னிற்றூக்க பூங்கொடியுந் தனித்தணி பகுத்து நிறுவித்
திண்டேர் நடாததுதரு வழுவருக்கோதை யாய் சிறுதேருருட்டியருளே
தேவராபயங்காத்த தெய்வப்பசுங்குழவி சிறுதேருருட்டியருளே (௧)

மாதர்மதர்நோக்கிற குழைந்தமான் கன்றுமெழில் வாணுதற் கண்டுவெலீந்து
மதியிளங் குழவியும புமூராலுக்கஞ்ச மறைபு குதலைபுருவ்ளம

பேதையு ருவமைய ளித்தபய நல்குமெம் பெருமாட்டி பங்கர்க்கு
பெருமலைக் கரையனருள் பனிமலைவி ளங்கும் பிராட்டியங் கையினெடுத்துச்
சுடர்க்கொழுமுலைப் பாலினைத் திட்டுவெண் சரிமுகச் சங்கினூட்டித்
தொகுசந்த முச்சியிற் பண்டியிற் சேர்த்துடற் சுற்றிக்க விழ்த்துமேனி
தீதனாறுஞ் சுண்ண நீராட்டி வளர்குமர சிறுதேருருட்டியருளே
தேவராய யங்காத்த தெய்வப்ப சுந்தழவி சிறு தேருருட்டியருளே (௨)

பட்டவிழ்த் தலரிதழி யந்தொங்க றூங்குசெவ் வானறல்கொ ழித்த தேய்ப்ப
வளர்செஞ் சடாமுடிபொ ருத்தன்றி ருத்தகும டங்கலூர்பகவதியுடன்
வட்டமொத் திடகட்ட மிடுஞொன்று குலகிரியு மறிகடலு மண்ணும் விண்ணும்
மாதிரமு மண்டரா கண்டலனு நிலைதட்டு மாறிச்சு ழன்றுடமேற்
கட்டுசெஞ் சடையினிற் றிங்களா டப்புனற் கங்கையா டப்படப்பைக்
கட்செவி திளைக்காட நின்றநெட்சியிற் காண நடண்டபாதத்
திட்டமிட் டாடும்பி ரான்றந்த முருகேச சிறுதேருருட்டியருளே
தேவராய யங்காத்த தெய்வப்ப சுந்தழவி சிறுதேருருட்டியருளே (௩)

மருமணக் கெழுமுபூந் தொடர்துயில் வருந்துழன் மடந்தையர் கடைந்தவடி
மைக்கணுந் திக்கெனுஞ் சக்கரந் திகைவிசை மதவேண் மனங்கறுத்து வாண்
பொருநெடுஞ் சிலையினு ணேற்றிக் குணத்தொனி புதாக்கிக் காத்தடுக்கிப்
புங்கம்பதித்துத் தொடுத்துவிடு பகழியும் பூசல்கொண் டெதிமலைந்தும்
பெருநெறி விலங்காது மருநெறி விளக்கிப் பிறங்குபூந் துறைசைநாட்டிற்
பேராகமத்தொடு தமிழ்ப் பெருங் காப்பியப் பெற்றியுங் கற்றுணர்ந்து
திருவிளங்கியநியம மருவுதென் கோதையாய் சிறுதேருருட்டியருளே
தேவராய பங்காத்த தெய்வப்ப சுந்தழவி சிறுதேருருட்டியருளே (௪)

செய்க்கட் பகுந்தாட் சரோருக மலர்ந்துபொழி தேன்செழுஞ் சாலிவயலிற்
றேக்கிப் பரந்திடத் தாழைக்குடம்பிளந்து செம்முகப்பகுநிறத்த
மூக்கட் குரும்பைமை யுடைத்திளஞ் சூற்பிணைவை முதுமந்தி நெருத்தி
மூரிக்க ரும்பகடுழுஞ்சா லெறிந்திட முடங்கலம் விட்டுழுனர்போ
யிக்குப் படப்பையுட் புக்கொளிப் பப்பண்ணை யிளநாறுநடுநடைசியர்
இழிவாநகைத்துக்கை கொட்டியா டவர்திற மிழுக்கியார்த்திடு நல்லோதை
திக்கெட்டினும்பரவு கோதையம்பதிமுருக சிறுதேருருட்டியருளே
தேவராய பங்காத்த தெய்வப்ப சுந்தழவி சிறுதேருருட்டியருளே (௫)

பாடளி பொய்த்தெழு தண்டலையூடலர் பைம்போத் தெதிர்
கொய்யும், பாவைமறைந்தய னீழல்வதிந்துறை பண்புடை நாதனை
யோர், சேடிமறைத்தரு குறவிரு குவளை செழுந்தா மரைமுக.
செய்கையி னோடிரு கண்புதைகொள்ளச் சிந்தையுறுகாவா, லாடக
மணியொளிர் கடகச்செங்கையி தாரென லும்புலரா, ஆயிழை
சீற்ற மிழந்தடி யன்பிழை யாயிர மும்பொறென, லூடல்திருத்
திடு கோதைக் கிறைவவு ருட்டுக சிறுதேரே, யுமையொரு பாகரு
வந்தருள் பாலனு ருட்டுகசிறுதேரே. (௬)

கோங்கின ரும்பன முலைமட மங்கையர் கொலைவேல் விழி
தாவுங், குழையணி தண்டர ளந்துவல் வருமொளி குளிர்வெண்
ணிலவின, வீங்குமுலைக்கணி களபஞ்செக்கர் விரிப்ப மதாணிமணி,
வெயிலுமி ழத்தமின் மனமகிழ் கொண்டு விழாவணி பாராட்டி,
வாங்கு மருங்குறு வண்டிட முன்றிலின் வள்ளைவ ளம்பாடி, மன்ற
லியற்றிய பொங்கொலி யார்கலி மன்னுமுழக்கமென, வோங்கி
வளங் கெழுகோதைக்கதிப னுருட்டுக சிறுதேரே, யுமையொரு
பாகருவந்தருள் பால னுருட்டு சிறுதேரே (௭)

பாசடை முள்ளரை மெயநாளச்செம் பங்கய மலரமளிப்,
பார்ப்பினை வெஞ்சிறை யூடுது யியற்றிய பாணிறமடவன்னம், நேச
முறுஞ்சே வலினரு கரசு நிலைஇய பெரும்பான்மை, நீனில வேந்
தருடன்பெண் ணரசு நிகழ்த்திள வரசினொடுந், தூசிமுடங்
குளை யரியணைபொலியுந் தோற்றமெ னக்ககனத், தூய்மலர்க் கற்
பக மிசைவல் விதுடங்கிநுடங்கியபச், சூசலின்மயிலுகைகோதைக்
கதிபவுருட்டுக சிறுதேரே உமையொருபாகருவந்தருள்பால னுரு
ட்டுக சிறுதேரே (௮)

கற்றைநி லாவுமி ழுஞ்செழு மாமதிகார்வரை யின்குடுமிக்,
கண்டவழக்கலை தேய்ந்தொழுகமுதங் சால்கொடு பேராருவி, முற்
றிவளப்பதி யாவணமண்டி முழுச்சசாயுப்பெருக, முருகுகமழ்ந்
தெழுபொங்கரிணண்மலர் முகைவிண்டிழிதேறற்,கொற்றம னேசன்
வசந்தவிழாவிற் குங்கும பங்கமொடு, கொடிநுண் ணிடைமடவார்
கடகக்கை கொழிக்குஞ் சிவிறியினீ, ருற்றுமணங்கெழு கோதைக்

கதிப னுருட்டுக சிறுதேரே, யுமையொருபாகரு வந்தருள் பால னுருட்டுக சிறுதேரே (௯)

அலர்கதிர்ஞாயிறு சினகரநீண்முடி யணவுதொ றுஞ்சுடர்கா, லம்பொன் மணிக்குட விம்பமடக்கிய வகல்பா தலவளவர, யிளகி விளக்க மணிச்சுடி கைப்பணி யீன்றபிரபைச்செம்மணி, யெதிரொளி சிந்தவளர்ந்தெழுகோபுர மெழுகுரவோர்வதியும், பலநிரைமாளிகை சூளிகை தாலிகர் பலகலைதோர்மாடம், பரிகலமங்கையர் தெரிபணரங்கு பசும்பொனின் மேனிலமும், முலகமுவந்தொளிர் கோதைக்கதிப னுருட்டுக சிறுதேரே, யுமையொரு பாகருவந் தருள்பால னுருட்டுக சிறுதேரே. (க0)

ஆகப்பருவம் க0-க்குச் செய்யுள் க0அ.

---

திருச்செங்கோட்டுக் குமாரர்
பிள்ளைத் தமிழ் முற்றிற்று.

உ

விநாயகன்றுணை.

சித்தளந் தூரைச்சார்ந்த புளியம்பட்டி என்கிற
சஞ்சீவி கரணி புரத்து

## முத்து விநாயகர்

# ஏகாதச மாலை.

---

கட்டளை கலித்துறை.

பொன்னுரும் நீள்சடைக் கூன்மதிக் கோடும் பொருமருப்பும்
முன்னூலு வாயும் புழைக்கையுஞ் சேப்பு முறிசெவியுந்
தன்னே ரிலாத்தடந் தோள்குறுந் தாளுந் தயைமுகமும்
மின்னுருங் காணவந் தாண்டாளும் முத்து விநாயகனே. (௧)

நாயக னேயெங்க ணற்றுணை யேதவ ஞானருணுந்
தூயமு தேயெது வேண்டினு மீயுந் துளிர்த்தருவே
வேயுறு தோளி யுமையீன்ற முத்து விநாயகநின்
ஆயபொர்ச் சேவடி யன்றியின் றெற்கா மருந்துணையே. (௨)

துணைவேண் டியுநற் சுதர்வேண் டியும்பொன் றுலங்குமரி
யணைவேண் டியும்பிற தேவரை வேண்டுந ரஃதடையா
இணையிடி லாதமுத்தைங்கர முன்னினை யேத்தியுய்வார்
பணைமேவு சித்தைசஞ் சீவகரணிப் பதியரசே (௩)

பதியர சாளினு மைபம் புகினும் பகைவரிசை
சதிமுறை யாற்சிறை மேவினு நோயாற் றளர்வுறினும்
மதிமுக மேனி வளரினு முத்து மதகளிறே
கதிதரு நின்கழ லெப்போதும் நெஞ்சிற் கருதுவனே. (௪)

கருதியு மாலயஞ் சூழவு மேலைக் கதிதருநூல்
இருசெவி கேட்கவும் பாடவு நெய்விளக் கேற்றவுநின்
றிருவடி யார்களைப் போற்றவு நல்லருள் செய்கழையுங்
கருவிள வுங்கொளு முத்து விநாயகக் கார்முகிலே (௫)

கார்முகிலோனும் விதியுங் கருமனுங் கைபிசைந்தன்
றோர்முக மாநினை வேண்டக் கயனை யொறுத்தவகோக்

கார்முகங்கோட்டிப் புரமட்டவன்சுத காவெமை பாச
சீர்முக முத்து வினாயக விண்ணவர் தேசிகனே. (௬)

தேசிக ஞானம்பி யாண்டார்நம் பிக்குத் திருத்தொண்டர்சீர்
பேசிய வாகா விரிநதி கொங்கிற் பெருகவிசை
வாசக மேபெளி யென்றனை யாள்முத்து வாரணமே
ஆசறு மும்மல நீக்கத்துக் கேற்ற வருமருந்தே. (௭)

மருந்து மணியுநீ மந்திர நீயுயர் வானமரர்
அருந்து மவிநீ யரும்பத நீமெய் யடியவர்க்குத்
தருந்தரு நீயுனை யன்றிப் பிறிதில்லை சற்குருவாய்
அருந்துயர் தீர்முத்துக் குஞ்சர மேயெனை யாண்டருளே (௮)

அருமை பெறுமிவ் வுடல்வீழுமென்ன வறநெறியுன்
திருவடிப் பத்தி தனைப்போற் பிறவெனுஞ் சிவதனய
பெருநூல் லோருளம் வாழ்வா யலாமலிப் பேயையுமாள்
கருநிகர் முத்து விநாயக னேயெந் தனித்தெய்வமே (௯)

தெய்வப் பொருள்நகைகொண் டேனடியர்க்குத் திங்கிழைத்
[தேன்
மெய்வத் துவினிலை தேறேன் கனவில் விநாடியிறை
சைவத் திருமுறை கேளேன்பொல் லேனெனைத் தள்ளிவிடா
துய்வித்தருள்புரி முத்துவிநாயக வோங்கொளியே (௧௦)

ஒளியே யகன்று நடைதளர்ந் தூண வுறக்கமற்றுட்
களியே யிருந்துணர் வேகிடுங்கா லுன் சரணினைப்ப
தெளியேன் வசமல்ல வென்றே யின்றே நினையேத்திவைத்தேன்
அளியே [illegible] யன்றுவந்தெனை யாட்கொள் பொன்னே (௧௧)

முற்றிற்று.

இது தி. அ. [illegible]சாமிக் கோனார் இயற்றியது.

அச்சிலிருக்கும் புத்தகங்கள்.

---

தக்கை ராமாயணம்.

கொங்குவேளாள குலமஞ்சரி.